

# சிலுவைகளே
## சிறகுகளாய்

வி.மைக்கல்கொலின்

மகுடம் வெளியீடு



காலகாலமாய்
காற்று வெளியெங்கும்
ஒரு பறவை அலைகிறது
நிரந்தரமாய் குடியிருக்க
ஒரு கூடு தேடி

# சிலுவைகளே
# சிறகுகளாய்

வி.மைக்கல்கொலின்

மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

**மகுடம் பதிப்பக வெளியீடு - 24**
ISBN : 978 - 955 - 4041 - 19-6

● நூல் - சிலுவைகளே சிறகுகளாய் - புதுக்கவிதைத்தொகுதி ● ஆசிரியர் வி.மைக்கல் கொலின் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - மார்கழி-2019 ● பக்கங்கள் - 96 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு - அச்சு - வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 300/=

● Book - Siluvaikale Sirakukalai ● Author -W.Michael Collin ● © Author ● First Edition - December-2019 ● Size - 1/8 ● Pages - 96 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Cover Design T. Shankar ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 300/=

# பதிப்புரை

**வி.**மைக்கல் கொலின்

ஈழத்து இலக்கியப் பரப்பில் தவிர்க்கவியலாத பெயர். திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், சமகாலத்தில் மட்டக்களப் பினை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற இரு மாவட்டங்களின் கலை இலக்கிய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆற்றிவரும் காத்திரமான பணிகள் காலம் அறிந்தது.

கவிஞர்,
எழுத்தாளர்,
குறும்பட இயக்குனர்,
சஞ்சிகையாளர்,
பத்திரிகையாளர்,
வெளியீட்டாளர் என பல்பரிமாணத் தளங்களில் இயங்கி வருபவர். இயங்குதல் என்பதற்கப்பால் மேற்குறித்த துறைகளில் தனது ஆளுமையை பதித்து வருபவர்.

1992களில் வெளிவந்த இவரது 'என் பிரிய ராஜகுமாரிக்கு' என்ற புதுக்கவிதைத் தொகுதியே திருகோணமலை மண்ணில் அச்சில் வெளிவந்த முதல் புதுக்கவிதைத் தொகுப்பாகும்.

கிழக்கு மண்ணில் இருந்து முதன்முதலாக தொலைக்காட்சி நாடக நெறியாள்கையில் "டிப்ளோமா" முடித்தவரும் இவரே. இதன் நீட்சியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய தொலைக் காட்சி நாடக பிரதியாக்கல் போட்டியில் அகில இலங்கை ரீதியாக பரிசு பெற்ற "மரபை மீறும் மானுடம்" என்ற தனது நாடக பிரதியினை 1993ல் குறும்படமாக நெறியாள்கை செய்தார். இதுவே திருகோணமலை யின் முதல் குறும்படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் 1985 - 1995 வரை இவர் வெளியிட்ட "தாகம்" கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழே திருமலையில் தொடர்ந்து பத்து வருடங்களாக வெளிவந்த ஒரே இலக்கிய இதழாகவும் ஒரு இளம் எழுத்தாள குழாமை உருவாக்கிய பெருமையும் கொண்டது.

மட்டக்களப்பில் இருந்து 1998இல் வெளியான "தினக்கதிர்" வாரமலர் 2000 இல் வெளிவந்த "தினக்கதிர்" நாளிதழ் ஆகியவற்றின்

உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றி முறையே அதன் பிரதம ஆசிரியர், இணை ஆசிரியர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

2012 தொடக்கம் மட்டக்களப்பில் இருந்து "மகுடம்" என்ற கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழை வெளியிட்டுவரும் மைக்கல் கொலின் வெளியீட்டாளராக தாகத்தின் மூலம் ஆறு நூல்களையும் மகுடத்தின் மூலம் இருபத்திநான்கு நூல்களையும் இதுவரை வெளியிட்டுள்ளார்.

புதுக்கவிதை இன்று மரபாகிப்போனாலும் "புதுக்கவிதை" என்றே அழைக்கப்படுகிறது. பழசு புதிது என்பதெல்லாம் ஒரு வசதிக்குத்தான். ந. பிச்சமூர்த்தியால் இனங்காணப்பட்ட இக்கவிதை மரபு, இன்று நா. முத்துக்குமாரையும் தாண்டி வளர்ந்து கொண்டிருக்கிறது.

உணர்ச்சித் தெறிப்பும் அனுபவ வீச்சுமாய் சங்கக் கவிதைகள், கதையும் கருத்துமாகக் காவியங்கள், பண்ணோடு பாடலாக பக்தி இலக்கியங்கள், வாழ்வின் அனைத்து விடயங்களையும் எழுதலாமென்ற நம்பிக்கை தரும் தனிப்பாடல்கள், இந்த மரபின் எளிமையை உள்வாங்கிய பாரதியின் எளிய, ஆனால் தனிச்சிறப்பு வாய்ந்த இசைப்பாடல்கள், செய்யுள்கள் என இவையனைத்தும் தமிழனின் எழுத்து வடிவப் பண்பாட்டைக் கொண்டவை.

எனில் இக்கவிதைத் தொகுப்பிலுள்ளவை தத்துவம் பேசவில்லை. வேதாந்த விசாரம் செய்யவில்லை. காலம் வெளி என்றெல்லாம் கருத்துக் கொள்ளவில்லை ஆனால் வாழ்வையே பேசுகின்றன. வாழ்வின் சாராம்சத்தில் திளைக்கின்றன. அனுபவங்களை முன்வைக்கின்றன. உணர்வுகளையே வெளிப்படுத்துகின்றன.

மகுடம் நூல் வரிசையில் இதுவும் ஒரு கவனத்துக்குரிய நூலாகும். வாசகரின் ஆதரவு இது போன்ற பல நூல்களைத் தொடராகப் பதிப்பிக்கும் உற்சாகத்தைத் தரும்.

- கவிஞர். **அ.ச.பாய்வா**

# அணிந்துரை

**வி.** மைக்கல் கொலினின் ”சிலுவைகளே சிறகுகளாய்“ என்ற இந்த இரண்டாவது கவிதைத் தொகுப்பு உள்ளடக்கியுள்ள கவிதைகளின் பேசுபொருள்கள் பெரும்பாலும் அகம் சார்ந்த காதல் உணர்ச்சியையும், புறம் சார்ந்த சமகால - ஈழத்து உள்நாட்டுப் போருடன் தொடர்புபட்ட அவல உணர்ச்சியையும் பற்றியவையாகும்.

இவை ஈழத்துக் கவிஞர்கள் பலராலும் பேசப்பட்டு வருவனவாம். எனினும் அவற்றுடன் ஒப்பிடும் போது தனித்துவ அம்சங்கள் சிலவற்றை இவை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

காதல் என்ற மென்மையான வசீகரமான இயல்பான உணர்ச்சியை மிகை உணர்ச்சியுடனோ மனோரதியப் பாங்கிலோ உடல் சார்ந்து விரசமான முறையிலோ வெளிப்படுத்துபவர்களே அநேகர். மாறாக அண்ணல், நீலாவணன், நு்.மான், அ. யேசுராசா, சேரன், அஜந்தகுமார் முதலானோர் தனித்துவமாக வெவ்வேறு முறைகளிலே தமது காதல் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இத்தகையோர் வரிசையில் மைக்கல் கொலினின் காதல் பற்றியெழுந்த கவிதைகளுக்கும் ஓரிடமிருப்பது நிதானமாக வாசிக்கும் போது தெரியவருகின்றது.

அரசியலும் காதலும் பற்றிப் பாடுவது என்பது இக்கவிஞரின் இரு கண்களாக உள்ள நிலையிலிருப்பதனை முதற் கவிதைத் தொகுப்பின் தலைப்பே (என் பிரிய ராஜகுமாரிக்கு) வெளிப்படுத்தியுள்ளது இந்நிலையில் இத் தொகுப்பிலுள்ள காதற்கவிதைகளை நயப்பது வாசகருக்கு சுகாநுபவமாக அமையும் என்பது உறுதி!

“அன்றொரு நாள்
ஆலய வளவுக்குள்
உன்னை சந்தித்த நினைவுகள்
இன்றும்
கடல் அலையாய்
ஆர்ப்பரித்து உயிர்க்கிறது

மடி தேடும் கன்றின்
கதறலாய்
ஓங்கி ஒலிக்கிறது
எட்டுத் திக்கெங்கும்
என் காதல் பாடல்

உன் உயிர்ப் பூவின்
வாசனை நான்
என் அடி வேரின்
ஆதாரம் நீ

என்றவாறு தொடங்கி

நான் விழுந்து
அலைவதற்கும்
கலைவதற்கும்
இடை நடுவே
நீ -
வெட்கித்த அந்த
தேவ நிமிஷத்தில்
ஓராயிரம் வருட
தவத்தின் பயன்
என் காலடியில்
வீழ்ந்துபடகிடக்கிறது
ஜென்மாந்திர பந்தங்களுடன்.

என்று முடிகின்ற கவிதை அதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகின்றது.

இத் தொகுப்பிலுள்ள கணிசமான கவிதைகள் கடந்த முப்பது ஆண்டுகளாக நடந்து முடிந்து ஓய்வெடுக்கும் போர்க்கால வாழ்வியலுடன் தொடர்புபட்டவை. (இவற்றுள் கணிசமானவை போர்க்காலத்தின் போது நூலுரு பெற்றிருக்க வேண்டியவை) பன்முக அனுபவங்களை வெவ்வேறு முறைகளில் வெளிப்படுத்துபவை. போர்க்கால இடப்பெயர்வு, ஊரின் அழிவு, பங்கர் வாழ்க்கை, அச்சமூட்டும் இரவுகள், காவலரண், முகாம் சித்திரவதைகள், என்றவாறு அவை வெளிப்பட்டுள்ளன. இவ்வாறெல்லாம்

நோக்கும் போது “மரணத்துள் வாழ்வோம்” இரண்டாம் பாகம் வெளிவருமாயின் கிழக்குப் பிரதேச போர்க்கால வரலாற்றை ஆவணப்படுத்துவதற்கு இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் பெருமளவு பயன்படுவதற்கான வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஈழத்துப் போர்க் கால ஆவணமென்ற விதத்தில் “புத்தம் சரணம் கச்சாமி, ரத்தம் சரணம் கச்சாமி” குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் வெளிவந்த போர்க்கால கவிதைகளில் புத்தர் ஏதோ ஒருவிதத்தில் நடமாடுவது வழக்கமாகும். நு:்.மானின் ”புத்தனின் தற்கொலை“ அவ்விதத்தில் பிரசித்தமானது. சு. வில்வரெத்தினம், இளவாலை விஜயேந்திரன், ஆகியோரது அத்தகைய கவிதைகளும் குறிப்பிடத்தக்கவை. இவ்விதத்தில் இத் தொகுப்பில் மூன்று / நான்கு புத்தர்களை கண்டு கொள்ள முடிவது கவனத்திற்குரியது. “புத்தம் + ரத்தம்” கவிதையில் இடம்பெறும் புத்தர் சற்று வித்தியாசமானர்.

ஈழத்துக்கவிதைகளில் கிறிஸ்தவ சமயத் தொன்மங்களை பயன் படுத்துவது அரிது. வீ. ஆனந்தன், சண்முகம் சிவலிங்கம் முதலானோர் சில கவிதைகள் எழுதியுள்ளனர். இவ்வாறு நோக்கும் போது ஈழத்தில் கிறிஸ்தவ சமய தொன்மங்களை அதிகம் கையாண்டவராக இக்கவிஞர் காணப்படுகின்றார்.

ஈழத்தில் இயேசுவும் கூடுதலாக தலை காட்டுவது இவரது கவிதைகளிலேயாகும். ஈழத்து வரலாற்றுடன் தொடர்புபட்ட முக்கியமான சம்பவமொன்று (புதிய தீர்ப்பு) மறுவாசிப்புக்குட்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. சோலைக்கிளியை தொடர்கின்ற அதிர்ச்சியூட்டும் படிமங்களும் பல உள்ளன.

இத்தொகுப்பிலே வாழ்க்கை பற்றிய இருப்புப் பற்றிய தேடல் கொண்ட கவிதைகளும் இடம்பெறுகின்றன.

ஈழத்துக் கவிஞர்களுள் வாழ்வின் இருப்பு, தேடல் என்பன பற்றிப் பாடுகின்ற புதிய தலைமுறைக் கவிஞர்கள் ஒருசிலரே. இத் தொகுப்பிலும் அத்தகைய கவிதைகள் இருப்பது இத்தொகுப்பின் பிறிதொரு முக்கியத்துவமாகின்றது. தமிழ்ப் புதுக் கவிதை முன்னோடிகளுள் முக்கியமானவரான பிரமிள் அவ்வாறான கவிதைகள் தந்திருப்பதும் அன்னார் திருகோணமலைக்குரியவர் என்பதும் இக் கவிஞரும் திருகோண மலைக்குரியவர் என்பதும் இவ்வேளை ஞாபகத்தைத் தொடுகின்றன. “தேடல்” என்ற தலைப்பில் வெளிப்பட்டுள்ள,

"காலகாலமாய்
காற்று வெளியெங்கும்
ஒருபறவை அலைகின்றது
நிரந்தரமாய் குடியிருக்க
ஒரு கூடு தேடி"

என்ற மைக்கல் கொலினின் கவிதை பிரமிளின் அத்தகைய சில கவிதைகளை தேர்ந்த வாசகர்களுக்கு ஞாபகப்படுத்தக்கூடும்!

இறுதியாக ஈழத்துக் கவிதைகளில் அரிதாகக் காணப்படும் சிறப்பம்சமொன்று இத் தொகுப்புக் கவிதைகளிலும் ஆங்காங்கு காணப்படுவது பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும்.

கவிதையின் உயிர் "சொல்" என்று கருதுவார்கள். "மந்திரம் போல் வேண்டுமோ சொல்லின்பம்" என்றான் பாரதி. "சிறந்த சொற்களை சிறந்த முறையில் சேர்ப்பது தான் கவிதை" என்றான் இன்னொருவன். "சொற்கள் நடமாடினால் கதை, நடனமாடினால் கவிதை" என்றான் மற்றொருவன். புதிய சொற்களை உருவாக்கிய அபூர்வ ஆற்றலும் பாரதியிடம் காணப்பட்டன. (உ-ம்) குழந்தையைச் "செல்வக் களஞ்சியம்" என்றமை, பெண்ணின் தோற்றப் பொலிவை "பொங்கிவரும் பெருநிலவு" என்றமை.

ஈழத்துக் கவிஞர்களில் இத்தகைய திறன் சு. வில்வரத்தினத்திடம் ஓரளவு காணப்பட்டது. இக் கவிஞரிடமும் அத்தகைய ஆற்றல் அரும்புவதை ஆங்காங்கு காண முடிவது குறிப்பிடத்தக்கது. (உ-ம்) வெட்கித்த அந்த தேவநிமிஷம், உயிர்க்குருவி, வற்றா காதல் பனிநதி, அமைதிச் சூரியன், பால்வெளித் தெரு, மேலே இறுதியாக குறிப்பிட்ட விடயத்தை நினைவு கூர்வதுடன் புதிய எடுத்துரைப்பு முறைகளிலும் இனி வருங்காலங்களில் இவர் கவனஞ் செலுத்துவாராக.

ஆக, தனது இரு கவிதைத் தொகுப்புகளினூடாக கிழக்கின் முக்கியமான கவிஞராக தன்னை இனங்காட்டியுள்ள - நிலைநிறுத்தியுள்ள - மைக்கல் கொலின் தொடர்ந்தும் இலக்கியத் துறையில் பிரமிள் வழியில் - சிவசேகரம் வழியில் பயணிப்பது கிழக்கு இலக்கிய உலகிற்கும் அவ்வழி ஈழத்து இலக்கிய உலகிற்கும் பயன் தரும் என்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை!

வாழ்த்துகளுடன்,

**பேராசிரியர் செ. யோகராசா.**

# காலம் சொல்லும் கவிதைகள்...

**எ**னது முதல் கவிதைத் தொகுப்பு “என் பிரிய ராஜகுமாரிக்கு” (1992) வெளிவந்து 27 வருடங்களுக்குப் பின்னர் (2019) வெளிவரும் எனது இரண்டாவது கவிதை நூல் இது.

ஒரு நீண்ட இடைவெளி தான். ஆனால் இந்த இடைவெளியில் வாழ்க்கை எனக்குக் கற்றுத் தந்த பாடங்கள் அநேகம்.

இந்தத் தொகுப்பில் இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய கவிதைகளில் இருந்து இற்றை வரையான கவிதைகளும் உண்டு.

என்னைப் பொறுத்தளவில் கவிதைகள் வாழ்வின் அனுபவங்கள். அது வாழ்வியல் நிகழ்வுகளை உண்மையாகச் சொல்ல வேண்டும்.

கவிதை உண்மையாக இருக்க வேண்டும். அதுவே காலத்தை வெல்லும் கவிதையாக, காலத்தில் நிற்கும் கவிதையாக மாறும்.

வலிகளுடன் வாழ்ந்தவர்கள் நாம். மரணமே வாழ்க்கையாக கடந்த முப்பது வருட கால போராட்டம் எமக்கு விட்டுச்சென்றது வலிகளும், அழிவுகளுமே. போராட்டம் எமக்கு சாதகமாக அமையா விட்டாலும் சர்வதேச ரீதியில் தமிழ் இனம் என்ற அடையாளத்தைப் பெற்றுத் தந்ததும் உலக அரங்கையே எம்மைத் திரும்பிப் பார்க்க வைத்ததும் எமது போராட்ட காலங்களே.

இழப்புக்களையும் வேதனைகளையும் அனுபவித்த ஒரு சமூகத்தின் குரலாக இக்கவிதைகள் உள்ளன. கால ஒழுங்கிலேயே இக் கவிதைகளைத் தொகுத்துள்ளேன். இது எமது சமூகத்தின் வரலாற்றை, வாழ்வைப் பேசும் கவிதைகள். எனது வாழ்பனுபவங்களோடு எனது இனத்தின் மீதான சோகமயமான சூறையாடலை இக்கவிதைகள் மூலம் பகிர்ந்துள்ளேன். இக்கவிதைகளை அது எழுதப்பட்ட காலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தாலே ஒரு சிறந்த வாசிப்பனுபவத்தையும் கவிதை மீதான புரிதலையும் பெறமுடியும்.

இக்கவிதைகளுக்குப் பிரசுர களம் தந்த பத்திரிகைள், சஞ்சிகைகள், மற்றும் முகநூலுக்கும் அணிந்துரை தந்த அன்புக்குரிய பேராசிரியர்

செ. யோகராசா அவர்களுக்கும் பின்னுரை தந்த பிரபல எழுத்தாளர் திரு. நந்தினி சேவியர், பதிப்புரை எழுதிய நண்பரும் கவிஞருமான அ.ச. பாய்வா. இந்நூலை அழகுற அச்சிடும் வணசிங்க அச்சகத்தினர், இக்கவிநூலை வடிவமைத்து அட்டைப்படம் தயாரித்த த. சங்கர், பின் அட்டை புகைப்படம் தந்துதவிய இனிய நண்பர் திரு.பிரசாத் சொக்கலிங்கம் ஆகியோருக்கும் எனது அன்பு நன்றிகள்.

ஒரு மனிதன் இயங்குவதற்கு அவன் சமூகத்தில் வெற்றியடைவதற்கு மிக முக்கிய காரணம் அவனது குடும்பமே. குடும்பத்தில் நிம்மதி நிலவினால் அவனால் / அவளால் எதனையும் சாதிக்கமுடியும் அந்த வகையில் நான் தொடர்ந்து கலை இலக்கிய சமூக ரீதியாக இயங்குவதற்கு துணை நிற்கும் எனது அன்பு மனைவியும், எனது கவிதைகளின் முதல் வாசகியுமான ஹஜேந்தினி மைக்கல்கொலின் எனது மகன்கள் ரொகான் ருக்ஷன், நிருஷான் ஆகியோரையும் மனதில் இருத்துகின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக கால்நூற்றாண்டுக்குப் பின்னர் எனது இரண்டாவது கவிதைநூல் வெளிவர நிதி உதவி அளித்த எனது அன்பு நண்பரும், தட்டுங்கள்.*com* செய்தித்தளத்தின் இயக்குனருமான திரு. பேரம்பலம் சுதாகரன் (கனடா) அவர்களுக்கு எனது இதய நன்றிகள்.

**- மகுடம். வி. மைக்கல் கொலின்**

## சமர்ப்பணம்

*என்னை வாழவைக்கும்*
*மீன் பாடும் தேன்நாடாம்*
*மட்டக்களப்பு மண்ணுக்கும்*
*மக்களுக்கும்....*

*நன்றி :*

**திரு.பேரம்பலம் சுதாகரன்** (கனடா), இயக்குனர், தட்டுங்கள்*.com*

## கடவுளும் நானும்

நான் எழுதிய
கவிதைகளில்
அழகாய் சிரித்துக் கொண்டிருக்கிறாய் நீ

என் கவிதையை
கடவுளுக்குப் பரிசளித்தேன்
கவிதையை வாசித்து முடித்த கடவுள் கேட்டார்
"யார் இந்த அழகி?"
நான்
புன்னகைத்தபடியே
உன்னைக் காட்டினேன்.
நீ -
சிரித்துக்கொண்டேயிருந்தாய்
உன் சிரிப்பில்
வெட்கப்பட்ட கடவுள்
கவிதையை என்னிடம்
திருப்பித் தந்து
என் கரங்களைப் பிடித்து
"இனி நீயும் கடவுள்"
என்றார்.

*14-02-2020*

## முடிவுறாத கவிதை

அன்றொரு நாள்
ஆலய வளவுக்குள்
உன்னை சந்தித்த நினைவுகள்
இன்றும்
கடல் அலையாய்
ஆர்ப்பரித்து உயிர்க்கிறது

மடி தேடும் கன்றின்
கதறலாய்
ஓங்கி ஒலிக்கிறது
எட்டுத் திக்கெங்கும்
என் காதல் பாடல்

உன் உயிர்ப் பூவின்
வாசனை நான்

என் அடி வேரின்
ஆதாரம் நீ

கன்னத்தில் வடியும்
உன் முடி ஊதி
மெல்லக் காது மடல் கடித்து
அடர்ந்து படர்ந்திருக்கும்
உன் கூந்தல் காட்டுக்குள்
பிடரி வழியே
என் கரம் நுழைத்து
மெல்லப் பற்றி
உன் திருமுகம் திருப்பி
உதடு வழியே
உயிர் குடித்து
ஊறும் வியர்வை முகர்ந்து
'சிகிரியா' ஓவியமாய்
சிதறிக் கிடந்த உன்னை ரசித்து
விழி மாறும்
ஒளித் தெறிப்பில்
கண் மலர்ந்து நீ
கிறங்கிக் கிடக்கையிலே
காமத்தின் கண் சொருகி
நான் விழுந்து
அலைவதற்கும்
கலைவதற்கும்
இடை நடுவே
நீ -
வெட்கித்த அந்த
தேவ நிமிஷத்தில்
ஓராயிரம் வருட
தவத்தின் பயன்
என் காலடியில்
வீழ்ந்து பட கிடக்கிறது
ஜென்மாந்திர பந்தங்களுடன்.

*22.05.2019*

## துரோகத்தின் துளிகள்

*தனது மேலாடை*
*கிழிந்து தொங்க*
*பிரமை பிடித்தவனை போல்*
*வீதியில் இறங்கி ஓடுகிறான்*
*யூதாஸ் காரியோத்*
*அவன் சட்டைப் பையில் இருந்து*
*ஒவ்வொன்றாய் வீழ்கிறது*
*முப்பது வெள்ளிக் காசுகள்*
*சிதறிக் கிடக்கும்*
*ஒவ்வொரு காசிலிருந்தும்*
*வழிகிறது*
*துரோகத்தின் இரத்தத் துளிகள்*

*23.04.2019*

## கடந்து போகிறது வாழ்க்கை

ஏதேன்
தோட்டத்திலிருந்து
கை நழுவி
பூமியில் வீழ்ந்த
கடவுளால்
சபிக்கப்பட்ட கனியை
கடித்த மனிதர்கள்
தங்களுக்குள்
கடித்துக் கொள்ள
தொடங்கினார்கள்
இன்றும்
தங்களுக்குள்
கடித்தபடியே...
கடந்து போகிறது
வாழ்க்கை

*01.01.2019*

## காலடித் தடங்கள்

எனது மண்ணில்பதிந்த
என் காலடித்தடங்களைத் தேடுகிறேன்
அங்கொன்றும்
இங்கொன்றுமாய்
வேரூன்றி விழுதுகளோடு
எனது பாடலைப் பாடிக்கொண்டிருந்தன

எனது அன்னையின்
தாலாட்டுப் பாடலோடு
கோணேசர் கோயில் மணியோசையும்
இன்றும் கேட்டுக் கொண்டேயிருக்கின்றது

ஆனால் தாலாட்டைக் கேட்க
குழந்தைகளைத்தான்
காணவில்லை

மண்ணின் புழுதியெங்கும்
தாகத்தோடு அலையும்
என் கவிதைகள்
முகங்களைத் தேடுகிறது
ஆனால் முகங்கள்
எல்லாம் கட்சிகளின்
வர்ணங்களைப் பூசிய
முகமூடிகளாய்

கடற்கரை வீதியில்
சுட்டுக் கொல்லப்பட்ட
ஐந்து மாணவர்களின்
இறுதி நிமிட உயிர் மூச்சின்
சப்தம்
இன்னமும்
ஒலித்துக்
கொண்டேயிருக்கிறது
மக்கெய்ஸர்
மைதானமெங்கும்

நரிகளின்
வாசலுக்கு முன்னே
தவம் கிடக்கும்
கழுதைகள்

உயர்ந்தேதான் நிற்கிறது
காளி கோவில்
கோபுரம்
தாழ்ந்தேதான் கிடக்கிறது
தமிழர் தம் தலைநகரம்

*15.07.2019*

## உயிர்க்குருவி

வெட்கத்தை தலை கோதும்
உன் செல்லச் சிணுங்கல்
உன்மத்தம் பிடித்த
என் சித்தத்தின்
உயிர்க்குருவி
சக்கரவாக பட்சியாய்
என்றுமே வற்றா
காதல் பனி நதியைப்
பருகியபடியே
காலத்தின் வெளியில்
தன் சிறகுகளை உதிர்க்கிறது.

*22.05.2018*

## சிலுவைகளே சிறகுகளாய்...

*கரங்களை விரித்து*
*கால்களை இணைத்து*
*ரத்தம் வடிய வடிய*
*சதைகள் கிழிந்து தொங்க*
*நரம்புகள் புடைத்து*
*சர்வாங்கமும்அடங்க*
*சிலுவை மரத்துடன்*
*பிணைத்து*
*அறையப்பட்டஆணிகள்*
*ரத்தத்தால் நனைந்த*
*அந்த இரவின் ஜாமத்தில்*
*கழன்று வீழ்ந்தன மண்ணில்*

*ஆடைகள் களையப்பட்ட*
*இயேசுவின்*
*நிர்வாணம் மறைக்க*
*கட்டப்பட்டது*
*கச்சைத் துணி*

*கபாலம் பிளக்க*
*சொருகப்பட்ட*
*ஆணிகள் பதிந்த முள் முடி*
*மகுடமாய் மாறிய மாயம்*
*சிலுவை மரமெங்கும்*
*சிறகுகள் பூத்தன*

*வேரோடும் வேரடி மண்ணோடும்*
*பிடுங்கி எடுக்கப்பட்ட*
*மரவெள்ளி செடி போல*
*உலர்ந்து போன*
*ரத்தக் கறைகளுடன்*
*நிமிர்ந்தே நிற்கும்*
*பனை மரமாய்*
*மேலே கிளம்பியது*
*சிலுவை மரம்.*

எவர் என்ன சொன்னாலும்
பிலாத்துவின் தீர்ப்பு
நின்று நிலைத்தது.
இயேசுவுடன் சேர்த்தே
அறையப்பட்ட
"யூதர்களின் அரசனாகிய இயேசு"
என்றபட்டயம்
அவரை ஒரு இனத்தின்
தலைவனாக்கியது
காற்றலைந்து
கண்ணீரில் குளித்த வெளி
ஓலங்களால் நிறைந்து
உலகுக்கு புதிய மொழி
சொன்ன வெளி
வரலாற்றின் பக்கங்களில்
பதியப்பட்ட நிலமாய்
அதிர்ந்தது "கொல் கொதா" பூமி

வெறுமையாய் கிளம்பிய
சிலுவையில்
இயேசுவைக் காணவில்லை

சிலுவையில்
அறையப்படாமல்
அவர் தப்பியதான,
அவரது சீடர்கள் அவரை
பாதுகாப்பாய் கடத்தியதான
கதைகளும்
ஜெருசலேம் வீதிகளில்
விற்கப்பட்டன

சிறகு முளைத்த சிலுவை மரம்
ஒன்றாய் -
பத்தாய் -
நூறாய் மாறி
காற்று வெளியெங்கும்
மிதந்து திரிந்தது

காற்றில் மிதந்த சிலுவைகள்
காலங்களை கடந்து பயணித்தன
வீதிகளில் மாணவர்கள்
புதிய போராட்டத்தின்
திசை நோக்கி
தம் பெற்ற மகனை
மகளை -
கட்டிய கணவனை-
சொந்தங்களை-
உறவுகளை -
தாம் தலை முறை
தலை முறையாக வாழ்ந்த
தம் சொந்த மண்ணையும்
இழந்த
மக்கள் கூட்டம்
வாழ்வதற்கான தமது
போராட்டத்தை
உறுதி செய்ய
வீதியில் நின்றது

காலங்களுக்கூடாக
பயணித்த சிலுவைகள்
பறந்து வந்த வேகத்தில்
மாணவர்களின் மீதும்
மக்கள் கூட்டத்தின் மீதும்
வீழ்ந்து எழுந்தன

சிறகுகள் முளைத்த
சிலுவைகளை சுமந்த
முதுகுகளிலும்
சிறகுகள் முளைக்க
சிலுவைகளையே
சிறகுகளாய்க் கொண்டு
பறக்கத் தொடங்கியது
ஒரு
மக்கள் கூட்டம்.

*18.05.2012*

## மாயக்கல்லி மலை

நேற்றிரவு
என்கனவில்
புத்தர் வந்தார்
மாயக்கல்லி மலையிலிருந்து
இறங்கி வந்த அவரின்
பாதங்களில் வழிந்துகொண்டிருந்தது
ரத்தம்
அவரின்
தலைக்குப் பின்னால்
சுழன்று கொண்டிருந்த
ஒளிவட்டம்
கலைந்து
புகை வலயமாக
மாயக்கல்லி மலை முகடுகளெங்கும்
அலையத் தொடங்கியது

புதிதாக நாட்டப்பட்ட
அரச மர இலைகள்
சிதறிக் கிடந்தன நிலத்தில்

பகல்களும்
இரவுகளும்
பேரமைதியை
பேய் அமைதியை
விழுங்கிக் கிடந்தன
புதிது புதிதாக
தோண்டப்பட்ட குழிகளுக்குள்
தொன்மங்களின்
படிமங்கள்
புதைக்கப்பட்டிருந்தன
நாளை அவை மீண்டும்
தோண்டப்படலாம்
புனித சின்னங்களாக
புதிய புதிய பிரதேசங்களை
நோக்கிய நகர்தல்கள்

இனங்களைப் பிரித்து
மதங்களை வளர்க்கும் அரசு

தூரத்தே கேட்கும்
புரவியின்
குளம்படிச் சத்தம்
என் காதுகளில்
ஓங்கி அறைகிறது

கனவு கலைந்து
கண் விழித்திடும்
அந்தத் தருணத்தில்
கண்டேன் ஒரு காட்சி
புத்தர் மீண்டும்
சித்தார்த்த தோரணையில்
புரவியின் மீதேறி
தன் அரண்மனை நோக்கி
பயணிப்பதை.

*22.04.2017*

## சொல்லின் கவிதை

என்
கவிதை வரிகளிலிருந்து
உதிர்ந்து விழுகின்ற சொற்களை
நட்சத்திர ஆணியின்
துணையுடன்
மீண்டும் மீண்டும்
பொறுத்தி விடுகின்றேன்
வழி தப்பிய
சொல் ஒன்று
எங்கெங்கோ அலைந்த படி
தினம் என் கனவில் புலம்புகிறது.
பரிதாபம் தாங்காமல்
அந்த சொல்லை
என் கவிதையில் இணைத்தேன்
உயிர்த்தது கவிதை
இப்போதெல்லாம்
என் கனவுகளில்
மீண்டும்
வந்து வந்து மறைகின்றன
ராணுவ பாதங்கள்.

*14.02.2017*

## உன் மௌனமும்
## எழுதப்படாத என் கவிதையும்

*வெறும் வெற்றுத் தாள்களாய்*
*என்னைச் சுற்றி*
*வீசப்பட்ட உன்*
*மௌனங்களில்*
*"அரிச்சுவடி" படிக்கும் பிள்ளை -*
*ஒவ்வொரு*
*எழுத்துக்களாய் சேர்ப்பது போல்*
*உனக்கான வார்த்தைகளை*

ஒவ்வொரு எழுத்தாய்
எழுதிக்கொள்கின்றேன்

உன் மௌனத்தின்
வெற்றிடம் எங்கும்
என் நினைவுப் பறவைகள்
சிறகடிக்கின்றன
எனக்கான ஏதாவது
ஒரு செய்தி
அதில் அறையப்பட்டுள்ளதா
எனத் தேடி

என் தேடலை
மண்டியிட வைத்து
உன் மௌனம்
விளையாடும்
கண்ணாமூச்சு விளையாட்டு
உலகின் அத்தனை
மொழிகளின்
வார்த்தைகளையும்
உள்ளடக்கிய செழிப்புடன்
உன் மௌனம்

ஒரு சிறுவனின் மரணம்
உலகின் மனக்கதவை
தட்டித் திறந்ததைப் போல்
ஒரு இனத்தின்
இருப்பை அழிய விடாது
காப்பது போல்
எழுதப்படாத கவிதை
உன்னதமானது தான்
இதுவரை
அர்த்தப்படுத்தப்படாத
உன் மௌனமும்

*22.04.2012*

# புதிய மன்னர்களும்
# பழைய அடிமைகளும்

*எங்கள் தெருக்கள் வெறிச்சோடி கிடக்கின்றன....*
*தெருமரங்கள் இலைகளை உதிர்த்துவிட்டு*
*தன் மேனியெங்கும் மனிதத் தலைகளை அப்பிக்கொண்டது*
*ஜனங்களின்...*
*அழுகையையும் மீறி ....*
*மனித கபாலங்கள் மீதே பதிந்து செல்லும்*
*ரத்தக்கறை படிந்த சப்பாத்துக்கள் ....*
*காற்று வெளியெங்கும் கந்தக துகள்களும் மாமிச வாசனையும்*
*இன்னும் மிச்சமிருக்கிறது*
*சைக்கிள் வளையத்தை உருட்டியபடி*
*வீதிகளில் ஓடித்திருந்த*
*சிறுவர்களைக் காணவில்லை*
*'நுங்கு' வெட்டிய கோதினை*
*சக்கரமாக்கி பலகை வண்டில்*
*ஓட்டிய குழந்தைகள்*
*வெளியே வருவதில்லை*
*விட்ட இடம் தேடி வரும் பூமராங் போலவே*
*முப்பது வருட கால பயணம்*
*மீண்டும் தன் ஆரம்ப புள்ளியில் நிற்கிறது*
*இங்கே கல்வாரி மலைகளுக்கான*
*பாதைகள் ஆயிரம்*
*ஆனால் இயேசு நாதர்களைத்தான் காணவில்லை*

*(பூமராங் ஆதிகாலத்தில் பயன்படுத்தப்பட்ட ஓர் ஆயுதம். இதனை வீசினால் அது இலக்கினை தாக்கிவிட்டு மீண்டும் உரியவரிடம் வந்து சேரும்)*

*01.01.2011*

# இத்தால் சகலருக்கும்

ஒரு நீண்ட
காத்திருத்தலுக்கு
பின்னரான
நன்கு திட்டமிடப்பட்ட
அதிரடித் தாக்குதலைப் போல
காலா கால மௌனத்தின் பின்
என் கபாலம் திறந்து
எந் நேரமும் வெளிக் கிளம்ப
தயாரான நிலையில் கவிதை
வராமலேயே போய்விட்ட
எம் வசந்த பொழுதுகளும்
காலச்சிறைக்குள்
அடைபட்டு போன
ஞாபக உளைச்சல்களும்
இனத்தின் பேரால்
மொழியின் பேரால்
உறிஞ்சப்பட்டுப் போன
எம் இளமைக் காலங்கள்
கடந்து போன புகையிரதமாய்

மூன்று தசாப்த சுமைகளோடு
ஏமாற்றப்பட்ட
பயணிகளாய் நாம்....
குருதி நிறமாகும் நிலமாகி
நிணமணம் வீசும்
என்நாடு.
சொந்த முகவரி மறந்து
அச்சத்தில் அந்நியமாய்
அடையாளப் படுத்தவே
அவஸ்தையுறும் சகஜீவன்
மனித கபாலத்தே
சதைப்பிச்சை யாசிக்கும்
போலி மனிதர்கள்

மீண்டும் மீண்டும்
இனக்குட்டை குழப்பி
மிருகங்களின் பசியாற்ற
தம் உறவுகளையே உணவாக்கும்
அஹிம்சா தேசம்

சாதி, மதம், பேதம், வாதம்
முடிவுற்ற கால் கொண்ட
"அக்டோபஸ்" இடை
நாம் சிக்க
எவர் உயிர்க்கும் அர்த்தம்
இல்லையென்றே போனதிங்கே
இனிப் பிரதேசங்கள் மாறலாம்
புதிய நினைவுச் சின்னங்கள் தோன்றலாம்
புரிந்து கொள்ளுங்கள் (படிக்கும்)
சரித்திரம் என்பது நிகழ்வது அல்ல
சிலர் நினைத்தபடி எழுதி வைப்பது
ஆண்டவரே !
ஆண்டவரே !
ஏன் எம்மைக் கைவிட்டீர் ...?

*23.12.2010*

## மீள்வு

தாபங்களின் காட்டில்
எரிந்தது காதல் தீ
மழை நாள்
மண்ணின் மனம் போல்
இதய துவாரங்கள்
எங்கும்
காதல் மணம்
விலைபேசா ஒரு முத்தம் தா
என் காதலா
இந்த உலகையே
உனக்குத் தருகின்றேன்

பகல்கள் தோறும்
இரவுகள்
இரவுகள்  தோறும் என் கண்ணீர்
என் கடலில்
உன் துடுப்பை போடு
போகட்டும் காதல் படகு
தாபங்கள் தணியட்டும்
மீளவே முடியாத
பெரு வெளிக் காட்டின்
திக்குகள் இடையே
எப்போ மீள்வேன்
நான்.....

*23.08.2009*

## பயணம்

இது
பயணங்களை
முடித்த படகா ?
இல்லை
இதுவரை யாரும்
பயணிக்காத படகா?

யார் சென்றது இந்தப் படகில் ?
பத்திரமாய்
இடம் சேர்ந்த திருப்தியில்
மௌனத் தவம் கொள்கிறதோ...
இல்லை
யாருக்காகவோவான
காத்திருத்தலோ?

இந்தப் படகும்
நானும்
ஒன்று

யாரும் கவனிக்காத
படகும்
நீ
கவனிக்காத
நானும்

*23.08.2009*

## மகுடம் சூடிய கவிதை

எனது கவிதை
மகுடம் சூடிக்கொண்டது
இது கிழக்கின் பாடலை
ஓங்கி ஒலித்ததால்
அதற்கான மகுடத்தை
அதுவே சூடிக்கொண்டது

திடீரென ஒரு நாள்
எனது கவிதை
பெருவெள்ளமாய் மாறிப்போனது
அது ஊர்களை குடித்தது
உடமைகளை அழித்தது
நாடுகளைத் தாண்டி
மலைகளைக் கடந்து
எனது மண்ணின்
கிராமங்களைப் புரட்டிப் போட்டது

மக்கள் அனைவரும்
இடம் பெயர்ந்தனர்
இடம் பெயர வைக்கப்பட்டனர்
வேரடி மண்ணோடு
பிடுங்கி எறியப்பட்டனர்

வெள்ளம் புதிய ஆயுதங்களைத்
தரித்துக் கொண்டது
அது ஆட்டிலறிகளை
மல்டி பரல்களை
மக்கள் முன் வீசியது
வெள்ளத்தில் தப்பிய மக்கள்
வெடியில் வீழ்ந்து போயினர்

வயல் வெளிகளை
மக்கள் குடியிருப்புக்களை

தாண்டி ஓடிய பெரு வெள்ளம்
ஒரு மலையின் அடியில்
தரித்து நின்றது
முடிந்தது
முற்றும் முடிந்தது
எனது மண் சாக்காடாகியது

மனித உயிர்களை
குடித்து முடித்த எனது கவிதை
வான்வெளியில்
நெருப்புக்கோளமாய் மாறியது
'அக்னி' பிளம்புகளை
அள்ளி வீசியது
எம் மக்களின்
வாழ்வின் ஆதாரமான
வயல் வெளிகள் யாவும் கருகிப் போயின
மிச்சம் மீதியிருந்த மக்களும்
இடம்பெயர்ந்தனர்
விண்ணிலும் மண்ணிலும்
எனது கவிதை வெற்றி கொண்டது
எனது மக்களை அகதிகளாய்
விரட்டியடித்த எனது கவிதை
தனக்குத் தானே மகுடம் சூடிக்கொண்டது

தூரத்தே தன்னை நோக்கி
நீட்டப்பட்டிருக்கும்
துப்பாக்கியின் எல்லைக்குள்
நின்றபடியே ....

*(கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமை அமைச்சினால் நாடாத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி - 2008 கவிதை போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதல் பரிசு பெற்ற கவிதை)*

*23.04.2008*

## புத்தம் + ரத்தம்

ஒரு
முன்பனிக்காலத்தின்
கருக்கிருட்டு நேரம்
போதி மரத்தின்
கீழே அமர்ந்து
மென்மையாய்
மிக மென்மையாய்
புன்னகை புரிந்து கொண்டு
ஒன்றுமே தெரியாதவர் போல
கண்களை மூடிக்கொண்டு
ஏகாந்தப் பெருவெளியில்
கனவு காணும்
அந்த புத்தர்
தன் இருப்பிடம் விட்டு
எழுந்து நின்றார்

புத்தருக்கு முன்னே
எரிந்து கருகிப் போயிருந்த
இரண்டு தமிழ் இளைஞர்களின்
மனித உடல்களை
நாய்கள் சில சேர்ந்து
இழுத்துக்கொண்டிருந்தன

காலம்
கரைந்து கொண்டிருந்தது
சில இளைஞர்கள்
இருட்டோடு இருட்டாய் வந்து
புத்தரோடு ரகசியமாய்
கதைத்துச் சென்றனர்
போதிமரம்
தன் இலைகளை உதிர்த்து
தனக்குள்
சிரித்துக்கொண்டது
"இந்தப் புத்தர்
தன்
எல்லாவற்றையும் துறந்தார்
ஆனால் அரசியலை மட்டும் இன்னும்
இவரால் துறக்க முடியவில்லையே
அது ஏன் ?"

விடியற்காலை
முகம் சிதைந்த
போதிமர புத்தனின் கழுத்தில்
"டயர்" ஒன்று
எரிந்து கொண்டிருந்தது
புத்தருடன் சேர்ந்து

இருட்டில் வந்தவர்கள்
ஆயுதங்களுடன்
புறப்பட்டனர்
தமிழ்க் கிராமங்களை நோக்கி

எல்லாம் அறிந்த
போதிமரம்
காறித்துப்பியது....

*24.06.2006*

## என் இளமைக்கால ஆற்றங்கரை

மீண்டும் என் மண்ணில் கால்
பதிக்கின்றேன்
அதோ தெரிகின்றது
என் இளமைக்கால ஆற்றங்கரை
முப்பது வருடங்கள் முழுசாக முடிந்து
போனது
கண்கள் பனிக்க கால்கள் சிவக்க
மீண்டும் ஒருமுறை ஆற்றங்கரை
ஓரத்திலே நான் .....

ஆற்றங்கரை ஓரத்தில் வீற்றிருந்த
அரசமரம் மீதிருந்து

என்மேல் எச்சமிட்ட பறவைகள்
எங்கே?
புதிய சரணாலயம் நோக்கி
பறந்தனவோ -இல்லை
காலம் வந்து அவைகள்
இறந்தனவோ...?
ஆற்றங்கரை ஓரக்கட்டில்
கும்மியடித்த குமரிகள் எங்கே ...?
இன்று எந்த வீட்டு அடுப்பங்கரையில்
அழுது வடியும் பெண்டிர்கள் ஆனாரோ...
தேகம் போர்த்திய
ஆடைகளின் அழுக்கை
துவைத்துக்கொண்டிருக்கும்
அந்தத் தொழிலாள தோழர்கள் எங்கே ?
என் தேசத்தின் அழுக்கைத்
துவைக்கப் போயினரோ..?
அம்புலிக் கதை சொல்லி என்னோடு
கூடவரும்
தோழர்களே தோழிகளே நீவீர் எங்கே போனீர் ?
பிள்ளைகளைத் தொலைத்த
அன்னையர் தந்தையர் இன்று நீங்கள் தானோ ?

அந்த ஆற்றங்கரையோரம்
நான் கட்டிய மணல் வீடு எங்கே ?
மழைநீரில் நனைந்ததுவோ ? இல்லை
ஆற்றுத் தண்ணீர் அடித்துத்தான்
சென்றதுவோ? ...

கயல் துள்ளி விளையாடும்
என் வயல் வெளிகள் எங்கும்
கண் வீசும் தூரமெங்கும் சுடுகாடாய்
போனதுவோ..?
யார் செய்த கொடுமை இது?
யார் செய்த கொடுமை இது ..?
ஆத்து நீர் எடுத்து ஏத்தம்

இறைச்சவர்கள்
எங்கு போய் மாண்டாரோ? இல்லை
உலகமெல்லாம் அகதியாய்
அலைவாரோ ...?

அன்று என் கைநழுவி விழுந்த
மோதிரத்தை
ஏப்பம் விட்டது இந்த ஆறல்லவா ?
மாமாவுடன் வந்து நீந்திக் களிக்கையிலே
என் காற்சட்டை வழியே சுடு நீராய்
வழிந்த
சிறுநீர் கலந்த கோபம் ஆற்றுக்கு
இன்னமும் ஆத்திரம் தீராதோ ?
இப்போதும் என் மோதிரம் கிடையாதோ ?
ஆற்றுமணல் மேட்டிலே
அரசமரம் கீழிருந்த
பிள்ளையார் சிலையெங்கே?
புதுச்சாமி இதை யார் தான் வைத்தாரோ ...?
எம் இனத்தை அழிப்பதற்கு
இதுவும் ஒரு தந்திரமோ? இல்லை
இதுதான் அவர்களின் புதிய கட்சி
சூத்திரமோ?
என்ன மாற்றம் இது எனக்கொன்றும்
தெரியாது
மாற்றங்கள் தேவைதான் ஆனால்
என் அழகிய ஆற்றங்கரை
அழுது வடியும் மாயமென்ன ...?
இதில் ஓடுவது தண்ணீரோ இல்லை
எம் மண்ணில் தாலியறுத்த
பெண்களின் கண்ணீரோ ..?

என் மண்ணே என் மண்ணே
ஏன் எம்மைக் கைவிட்டாய் ?

*23.02.2002*

## எமது மண்ணின் மணம்

என் கிராமத்தின்
செம்மண் தெருக்களில்
மழைத் துளிகளை
பீச்சியடிக்கும் வானக்கடல்
பீறிட்டுக் கிளம்பும்
புழுதி வெள்ளத்தை
நாசி நுகரும்

மண்ணின் மணம் தந்த சுகானுபவம்
என் மண்ணுக்கொரு வாசமிருந்தது

மார்கழி மாத அதிகாலை இருளில்
இருட்டைக் கிழித்துக்கொண்டு
வந்தன சில வாகனப் பேய்கள்
எங்கோ தொலை தூரத்தில்
ராக்குருவி ஒன்று கூவிச்சென்றது

விடிந்தது எங்கும் ...
ஆனால் என் கிராமத்தின் இதயம்

மட்டும்
குத்திக்கிழிக்கப்பட்டது
சாக்குரலை தாங்கியபடியே
என் கிராமம்.
சேவல் கூட கூவப் பயந்தது
முகாரி ராகத்தை முனகிக்கொண்டது
கைகள் கட்டப்பட்டு
கண்ககள் மூடப்பட்டு
கால்களில் விலங்குகளுடன்
பல இளைஞர்கள் வீதியெங்கும்
சிதறி கிடந்தார்கள்
மேலாடை கிழிக்கப்பட்ட பல
கன்னிப்பெண்கள்
தம்மானம் மறைக்க
புதர்களுக்கிடையே
ஓடிப் போனார்கள்

விழிகளில் நெருப்பெரிய
சில இளங்குருத்துக்கள்
பாதுகாப்புத் தேடி
காடுகளுக்குள் ஓடிச் சென்றன!

என் மண்ணுக்கொரு
வாசம் இருந்தது அன்று
இப்போதும் என் மண்ணுக்கொரு
வாசம் இருக்கிறது
ரத்த வீச்சமுடன் கூடிய
உடல்கள் சிதறிய வாசம்
எம் இனத்தின் மீதான
அடக்கு முறையை
எதிர்த்து நிற்கும்
எம் பிள்ளைகளின் அணிவகுப்பில் எழும்
புழுதியில் படரும்
எம் இருப்பின் வாசம் ...!

*23.06.2001*

# இரவுக்காய் ஏங்கும் இவன்

ஒவ்வொரு நாளும்
நடுநிசிப் பொழுது
நட்சத்திரங்களை
எண்ணியபடி
உறங்கப் போவேன்

தூரத்தே குரைக்கும் நாய்களின் அலறல்
வானில் பறக்கும்
சாக்குருவியின் ஓலத்தில் மனசதிரும்
வீட்டில் மட்டுமென்ன ரோட்டில் கூட
எல்லோரும் உறங்கிய பின்பும்
என் விழித்தல்
நிமிடங்களை எண்ணியபடி
எப்போது வருவார்கள்
எங்கே ஓடலாம்
என்ற கனவுகள்
அடிக்கடி வந்து
முழிப்பு தரும் ...

கருக்கல் பொழுதின் விடியல்
மனசுக்கு தெம்பு தரும்
கண்கள் கசக்கி
மூளை பிழிந்து
எழுந்து அமருகையில்
கண்கள் மட்டும்
இரவுக்காய் ஏங்கும்

*23.03.2001*

## ரத்தத்தால் எழுதிய கவிதை

ராக்குருவி
ஓலமிட்டு அலறியது
இரவின் செவிகளில்
அறைந்து விட்டுப் போகும்
காற்றின் கைகள்
மூச்சடங்கிய இரவின் ஆழங்களைக் கடந்து
விடிகாலையில்
மீண்டும் ஒரு சோகத்திற்கான
முன்னுரை வாசிக்கப்பட்டது.

எங்கோ தொலை தூரத்தில்
காற்றலைகள்
போதி மாதவனின் புகழ் பாடியது
'புத்தம் சரணம் கச்சாமி.'

பனி சிதறிய
அந்த காலைப் பொழுதில்
ரத்தத்தால்
ஒரு நாளின் முகவரி எழுதப்பட்டது
வாழ்வு தந்தோம் என்று
அழைத்து சென்றவர்கள்
எம் மனிதர்களை
அடித்துக்கொன்றார்கள்

இவர்கள்
யாரும் காணாமல் பிடித்துச்
செல்லப்பட்டவர்களல்ல
ஊர் அறிய
உலகறிய
'மீண்டும் உமக்கு
புது வாழ்வு தருவோம்'
என்ற வார்த்தைக்கு மதிப்பளித்தோர்
கத்தி, பொல்லு, கோடரி, அலவாங்கு
முனைமுறிய
உணர்வழித்து
முகம் சிதைத்து
உயிர் குடித்த படுகொலைகள்!
தூரத்தில் கேட்கிறது
புத்தம் சரணம் கச்சாமி!

எரியும் டயர்களில்
எங்கள் மனிதர்கள்
எடுத்து வீசப்பட்டனர்
சுவர்களில் மோதி
கபாலம் சிதறி
கண்கள் பிதுங்கி
இருதயம் வெளித்தள்ளி
எரிந்து போனது
தப்பி எழுந்த உடலின்
நெஞ்சின் மீது விழுந்தது
அலவாங்கின் கூர்முனை
அவலக்குரல் எழுப்பி
கத்தி விட்டு போன
ராக்குருவியின் ஓசையின் மிச்சம்
இன்னமும் ஒலித்துக்
கொண்டிருந்தது

நகரமெங்கும்
பிண வீச்சம்
அந்த நிமிடங்கள் கடந்து
அழிவின் இரகசியங்கள்

மெல்ல மெல்ல
அவிழத் தொடங்கின
இத்தனை நாட்களும்
கரங்களை குலுக்கிய முகம்
நலம் விசாரித்துச் சிரித்துச் சென்ற முகம்
எத்தனை முகங்கள்
அவர்கள் முகங்களை சிதைத்தது
ஐயையோ...!
எங்கள் பிள்ளைகள்
எரி நெருப்பில் ....
என்ன பாதகம் செய்தோம் யாம்
மொங்கான் போடும் ஆயுதம்
எம் பிள்ளைகள் முகம் சிதைக்க
எம் இருப்பை அழிக்க முயலும்
அந்த கொடும் கரங்கள்
அழிவதெப்போ ?
எத்தனை வீட்டு முற்றங்கள்
கண்ணீரில்
நிரம்பின
மகனை இழந்த
சகோதரனை இழந்த
காதலனை இழந்த
எத்தனைப் பெண்களின்
கூக்குரல்கள் இங்கே

இங்கே சுதந்திரம் என்றதும்
புனர்வாழ்வு என்றதும்
சுடுகாடாய் மாறிப்போனது

(பண்டாரவளை பிந்துனுவெவ புனர் வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களில் 25ற்கு மேற்பட்ட இளைஞர்கள் 25-10-2000 அன்று அதிகாலை இன வெறியர்களினால் மிகவும் மோசமான முறையில் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டதன் நினைவாக ....)

25.10.2000

## புத்தம் சரணம் கச்சாமி
## ரத்தம் சரணம் கச்சாமி

எம் வாழ்விடம் இழந்து [1]
எரிந்த சாம்பல் துகள்களின் நடுவே
மனிதாபிமானம்  தேடும் மயக்கத்தில்
என் விழிகள்
கட்டி முடிக்க முன்னரே
"பூட்ஸ் " கால்களின் மிதிப்பில்
நசிபடும்
என் கனவுகள்.

ஓடியாடி விளையாடித் திரிந்த
என்மண்ணில்
ஓர் அகதியாய் வாழும் வாழ்க்கை
ஆலய வளவுக்குள் [2]
அடைபட்ட கைதியாய்
வானம் பார்த்து ஏங்கும் என்
ஜீவிதம்
வெளியேற முடியாது
வீதியெங்கும் வாகனத் தொடர்
என் மொழி எனும் முட்டையை
உடைப்பதற்காகவே
பிறப்பெடுத்த வல்லூறுகள்
என் தேசத்தின் இதயம்
எரிந்து போயிற்று
என்னை அழிப்பதற்கு

என் வீட்டை கொழுத்துவதற்கு
என்னை அகதியாய் தேசம் விட்டுத்
துரத்துவதற்கு
என்னை சிறையிலடைத்து
சித்திரவதைகளால் குளிப்பாட்டி
“பயங்கரவாதி” என்ற பட்டம் தந்து
நடு வீதியில்
என் மேற்சட்டையினாலேயே
என் கண்ணை கட்டி
இழுத்துச் செல்வதற்கும்
என்னிடமே எடுக்கப்படும்
பாதுகாப்பிற்கான வரி

II

இந்த தேசத்தில் இருந்து தூக்கி
எறியப்பட்ட மனிதம்.
கண்காணாத இடத்திற்கு நாடு
கடத்தப்பட்ட சமாதானம்.
பேச்சுக்கு கூட உச்சரிக்கப்பட
முடியாது போன ஜனநாயகம்
முகங்களை அழிப்பதற்காய்
தெருவெங்கும் தோன்றும்
ராணுவ முகமூடிகள்
கல்வாரி மலைகளின்
மறுபதிப்புகளாய்
காவல் அரண்கள்
எல்லாம், எல்லாமும் பாதுகாப்பு !
எமக்கான பாதுகாப்பு !
பிணங்களைத் தவிர
மலிவு விலைகளில்
ஒன்றுமே கிடைக்காத தேசமாய்
விழும் விமானங்களின்
எண்ணிக்கையைப் பார்த்து
சந்தோஷிக்கும் மனதைத் தந்த
எங்கள்
இனத்துக்கான உரிமை வாழ்வு

"என்னைக் காதலி-
இல்லையேல் கடத்திப் போய்
கற்பழிப்பேன்" [3]
நேசம் கூட துவேஷமாய் மாறும்
நிலையில்
எம்மையே கொல்லும் எமது கரங்கள்
எங்கள் பயணங்ககளின் போது சுமந்து
செல்லும்
பயண பொதிகள்
காவல் கரங்களால்
பிரித்து....
பிரித்து....
பிரித்து....
தனித்தனியே எதை எதையோ தேடி
மீண்டும் அள்ளிக் கொட்டி
எமது ஒன்றுமே இல்லாத
அவர்கள் நினைப்பில்
"குண்டுகள்'' இல்லாத
பயணப் பொதி போலவே
அரசியல் கரங்களால்
பிரித்துப் பிரித்து
அழிக்கப்படும்
தீர்வுப் பொதி

III
தேடுதல்
சுற்றி வளைப்பு
முகமூடி
தலையாட்டி
கைது
சித்திரவதை
டயர்
பிணம்

என் தேசத்தின் தேசிய

வார்த்தைகளுக்குரிய
அந்தஸ்து பெற்று விட்ட
உச்சரிப்புகள்
பொல்கொட! [4]
தியவன்னா!!
வாவிகள் தோறும்
மிதக்கும் மனித உடல்கள்
சூரிய கந்தைப் புதைகுழி [5]
தோண்டி...
தோண்டி...
தோண்டி...
புத்த வேடம் தரித்தவர்களின்
கதைகள் கூறும்
கொலைகளின் அடிப்படையில்
சித்திரவதைகளின் சிறப்புரிமையில்
பலாத்காரங்களின்
தலையாட்டுதல்களின்
வீச்சுகளுக்கேற்ப வழங்கப்படும்
பதவி உயர்வுகள்
ஓர் இனத்தின் மிச்ச சொச்சத்தையும்
எச்சமே இல்லாது அழிக்க முயலும்
ஆதிக்க வெறியின் சமாதான வேடம்

இங்கேயும் தோண்டுங்களேன்
செம்மணிப்புதைகுழியை [6]
துரையப்பா விளையாட்டரங்கை
இன்னும் இன்னுமாய்
யாழ் குடா நாடு எங்கும்
தோண்டுங்கள்!

பேச முடியாத வார்த்தைகளாய்
சோகம் சொல்லும்
சூரிய கந்தை புதைகுழிகள் போல்
இங்கும் உண்டு
தெரிந்தும் தெரியாதது போல

நடிப்பவர்களே
ஒரு வரலாற்று நகர்வில்
நீங்களும் காணாமல்
போகும் நாள் விரைவில் வரும்

வெள்ளைப்புறாவின்
சிறகையொடித்து
தாமரைப் பூவின்
வெள்ளைத் தாமரைப் பூவின்
பறிக்கப்பட்ட இதழ்களின்
ரத்தத் துளிகளால்
எழுதப்படும் நேச வாசகங்கள்
ஒடுக்கு முறையின் சூறாவளி
என் தேக தேசத்தின்
மயிர்க் கால்களைக் கூட பிடிங்கி
எரியும்
அந்த கணத்திலும்
உயிர் வாழ்தலின் மகிமையுணர்ந்து
நான்
வாழ்வின் உச்ச நேசிப்பை
வாழ்வின் மீதான என் காதலை
பற்றிப் பிடித்து எழுவேன்
புத்துயிர்ப்பு வேண்டி...
என் சுயத்தின் முகம் தேடி
எரி கனலாய் பரவும்
ராணுவ வதையின்
அந்தக் கணப்பொழுதிலும்
காற்றில் கரைந்து கவிதைகளாய்
பொழியும்
எனது கனவுகள்.
எனது கவிதைகள் கேட்டு
காலத் தீ எரியும்
சூரிய சுடராய்
சுட்டெரிக்கும் என் கவிதை!
கால வெளியூடே கேட்கும்
ரத்தக் கூக்குரல்களின்

*புதிய பரிணாமத்தில்*
*புதிய தேசம் பூப்பெய்தும்*
*என்ற புலர்வின் மகிழ்வில்*
*காலம் பிளவுண்டு*
*என்னை கௌவ்வி சென்றாலும்*
*நிமிர்ந்து நிற்கும் கல்வாரி மலையின்*
*சிலுவைக் குறியாய்*
*நிமிர்ந்து நிற்பேன்*
*என்றும்!*
*எப்போதும்!!*
*எங்கும்!!!*

*நி*
*மி*
*ர்*
*ந்*
*தே*
*தா*
*ன்*
*நிற்பேன்*

1. *1990.06.15 ஆம் திகதி ஏற்பட்ட இந் வன்செயலில் திருகோண மலையில் எனது வீடு எரிக்கப்பட்டது*
2. *அக்காலப்பகுதியில் அகதிகளாக ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தமை*
3. *மட்டக்களப்பில் தன்னைக் காதலிக்காத குற்றத்திற்காக தமிழ் பெண் ஒருத்தி தமிழ் இயக்க உறுப்பினர்களால் கடத்திச் செல்லப் பட்டு பாலியல் வல்லுறவு புரியப்பட்டாள் (1997-ஏப்ரல்)*
4. *கொழும்பில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பலரின் உயிரற்ற உடல்கள் மிதந்த வாவிகள்.*
5. *1990 காலப்பகுதி படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் புதையுண்டிருந்த பிரதேசம்*
6. *சூரிய கந்தை புதைகுழி தோண்டிய அதே ஆட்சியாளர்களால் (1997) யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் புதைக்கப்பட்ட பிரதேசம்*

***23.10.1997***

## நிஜம்

என் யுத்தங்கள் முடிந்து
சத்தங்கள் இன்றி
உன்னைத் தேடி வருகின்றேன்
உன் அருகாமை விரும்பப்படுகிறது
என்முகமனதை
உன் மார்பில் சாயவிடு
நான் உறங்க வேண்டும்.

என் பொய்மைகள் கலைந்து
வேஷம் கலைத்த நடிகனாய்
என் ஒப்பனை முகம் கழற்றி
என் சொந்தமுகம் சுமந்து கொண்டு
அமைதிப் பெரு வெள்ளத்தில்
மூழ்க வரும்
என் மனித மனத்தை
உறிஞ்சி விடாதே
வாழ்க்கை படித்து
நானும் இனிமேல்
வாழ வேண்டும்
ஒரு மனிதனாய்!
ஒரு மனிதனாய்...!!

*14.07.1997*

## என் இனிய அவளுக்கு...

என்னில் இருந்து
என்னையே நான்
விலக்கிக் கொள்கிறேன்
என் பழைய முகங்களும்
என்னுடன்
வருவதற்காய்
அடம் பிடிக்கின்றன
அவைகளின் கரங்களைத்
தள்ளி விட்டவனாய்
நான்.

இறந்த கால நிகழ்வுகளின்
இருண்ட களத்தில் நின்று எழுந்துவரும்

என் ஆத்மார்த்தமான பாடல்
இன்னமும் உன்
காதுகளுக்கு கேட்கவில்லையா?
ஏன் இந்த நடிப்பு
எதற்காய்
அவர்களைத் துணைக்குக்
கூப்பிடுகிறாய்?
காத்திருப்புகள்
பெறுமதியானவைதான் கண்ணே,
ஆனால் இங்கே
காலத்தின் கால்களில்
யாரும் கட்டுப் போடவில்லையே?
நகர்கிறது....
நகர்கிறது...
காலம்
தன் போக்கில் நகர்கிறது...
நகர்வின் நகர்தலில்
எமது வாழ்வின் இருப்பும்
அஸ்திவாரம் இடட்டும்
தொலைத்து விடாதே!

இங்கே
தேடுவதெல்லாம்
கண்டெடுக்கப்படுவதுமில்லை
தட்டியவுடன்
திறக்கப்படுவதுமில்லை
கேட்டவுடன்
கொடுக்கப்படுவதுமில்லை
எல்லாமே.....
எல்லாமே.....
போராடித்தான் பெறவேண்டும்
இதைப் புரிந்தால்
உனக்கும் எனக்கும்
வாழ்வு நிச்சயம்.

*15.07.1997*

## மரணமுகம் காட்டும் வாழ்க்கை

எம் வாழ்வுக் காலம்,
வாழ்வை நேசித்த குரல்கள்,
வாழ்வின் மீதான காதல் நிரம்பிய கனவுகள்,
எம் வாழ்விடம், எல்லாம் எல்லாமும்
எம்மிடம் இருந்து களவாடப்பட்டன
பூபாளப் பொழுதுகளில்
புத்த மத கோஷத்துடன்
எம்மையழித்தனர்
எல்லோருக்குமாக இங்கு
எல்லோரும் பட்டதுயர்
தாமரை இதழ் விரித்து
சிரித்த எம் குழந்தைகள்
அழிக்கப்படுகையில்
"சுதும் நெலும் கீதம்" எப்படிப் பாடுவது?
சூரியன் உதிக்காத தேசம் போன்று
அமைதிச் சூரியனின் வருகையில்லாத எனதூரில்
ஒவ்வொரு காலங்களிலும் தோண்டப்படும்
புதைகுழிகளைப் போலவே
எங்கள் உரிமை பற்றிய பேச்சும் தோண்டப்படும்
நம் நாட்டின் காற்றில்
கடலலைகளில்,

மலை முகடுகளில்,
வான் மேகங்களில்,
பறக்கும் பறவைகளின் பாடல்களில்,
சிறகசைவுகளில்
மிருகங்களின் ஓசைகளில்,
மரங்களின் சலசலப்பில்
மனிதர்களின் பேச்சுக்களில்,
காணாமல் போன மகனைத் தேடியலையும்
தாயின் கதறலில்,
கணவனை இழந்த மனைவியின் ஏக்கத்தில்,
போரில் மகனைப் பறி கொடுத்த தாயின் கண்ணீரில்,
அப்பாவைத் தேடி அழும் குழந்தையின் கண்ணீரில்,
சமாதானம் பற்றிய கனவுகளே கூடு கட்டும்
இல்லாத ஒன்றுக்காய்
ஏங்கும் மனசைப் போலவே
இங்கு வாழ்வும்,
உயிர் வாழ்தலின் நம்பிக்கை கீற்றுக்கள் பிளவுண்டு
மரண முகம் காட்டும்.
இனி மேல் நன்று
இலங்கை முழுவதும்
விளைச்சல் எங்கும் அமோகம் தான்
பசளை தேவையில்லாமலே
வளரும் பயிர்கள்.
இயற்கைப் பசளை இலவசப் பசளை
எங்கும் கிடைக்கும் மனிதப் பசளை
ஆம்
தினம்தினம் புதையுண்ட மனிதர்கள்
புதையுறும் மனிதர்கள்
வடக்கு கிழக்கே இனி நீ செழிப்பாய்
மனிதப் பசளை மண்ணுக்கு நல்லது
வீதியில் தொலைத்து வீட்டில் தேடும்
மடையர்களாய் நாம்
தேடிக் கொண்டிருக்கிறோம் சமாதானத்தை
யார் யாரதோ பேச்சுகளைக் கேட்டு

*23.04.1997*

## சத்திய வெற்றி

காற்றின் வேகம்
அறையெங்கும் படபடப்பு
நிச்சயமாய் இது
ஒரு புதிய காற்றின் வருகை
எங்கே இதன் ஜனனம்?

விழிவாசல் திறந்த
மன நதியின் சீரான நகர்வு

காற்று
என் அறை முழுவதும் கலைத்துப் போட்டது

என்ன இது
இந்தக் காற்று
எந்தப் படைப்பிரிவின் முன்னேற்றம்
குறிப்பிட்ட இலக்கை அடைந்து விட்டதிருப்தியா?
இல்லை

உயிர் வதை தடுப்பு பூசை செய்யும்
யுத்த மௌனமா?

காற்றின் சடசடப்பில்
சுவரில் தொங்கிய காலண்டர் பிள்ளையார்
உயர்ந்து வளைந்து
மடிந்து கிளம்பி
ஆடிக் கொண்டிருந்தார்

தினமும் வளாகம் செல்கையில்
இறங்கிச் செல்லும்
பிள்ளையாரடி பொலிஸ் காவல் நிலையம்
மனதில் தைத்தது
தினம் அதனைத் தாண்டுகையில்
பிள்ளையாருக்கு
வணக்கம் செய்வது பழக்கம்
ஏன் இந்த ஞாபகம்?
நேற்றைய மறதிக்கு
பழிவாங்கலா?
காற்றின் தூதனுப்பிய
எச்சரிக்கை சமிக்ஞையா?
இருக்காது
இது காற்றின்
தன்னிச்சையான படை நகர்வு
நிச்சயம் அது
எனது அறையைப் பொறுத்தவரையில்
ஒரு நாயைப் பார்த்த
திருப்தியில்தான்
தன் வெற்றிக் கொடி நாட்டும்

நாட்டட்டுமே
எனக்கென்ன வந்து விட்டது
இது எனது அறை
தொடர்ந்தும் நான் தானே
வசிப்பேன்!

*29.09.1996*

## புதிய தீர்ப்பு

*"டாங்... டாங்.... டாங்"*
*அரண்மனை அழைப்புமணி*
*மூன்றுமுறை அடித்து*
*தன் சோகம் சொல்லியது*

*மனுநீதி தவறா*
*சோழ மன்னன்*
*ஆணையிட்டான்*
*அரியாசனத்தில்*
*அமர்ந்தபடி*
*"யாரங்கே*
*அழைப்புமணி*
*அடித்தது!*
*அழைத்து வாருங்கள்*
*எனது ஆட்சியில்*
*என் குடிமக்களுக்கு*
*என்ன குறை?"*

*வெளியே சென்ற*
*சேவகன்*
*திரும்பி வந்தான்.*

"மன்னவா
அழைப்புமணி அடித்தது
மனிதரல்ல -
ஒரு தாய்ப்பசு
கண்களில் கண்ணீர் மல்க
மணியை அடிக்கிறது"
"என்ன குறை
அந்த பசுவுக்கு
பார்த்து வாரும்
மந்திரியாரே"
கட்டளையிட்டான்
மன்னவன்.

சேதி அறிந்த
"மந்திரி சொன்னார்
"மன்னவா -
தங்கள் அருந்தவப் புதல்வர்
எங்கள் இளவரசர்
தன் தேரைச் செலுத்துகையில்
பசுவின் கன்றை
கொன்றுவிட்டார்
அதுதான் -
நீதி கேட்டு
புலம்புகிறது
தாய்ப்பசு"

"அப்படியா -
உடனே பூட்டுங்கள்
எனது தேரை
அடித்துக் கொல்கிறேன்
முன்னே கட்டுங்கள்
அந்தக் கிழட்டுப் பசுவை"
மனுநீதிச் சோழன்
தேரில் ஏற
எழுந்து நின்றான்

*20.09.1996*

## இரண்டாவது இயேசுவாய்...!

ஆயுதங்கள்
மனிதனை விட
போற்றப்படுகையில்
ஆட்களின்
அடையாளங்கள்
அறியாமல்
துப்பாக்கிகள்
வெடிக்கையில்
நண்பா
நீயும் என்ன
நானும் என்ன
நீதியும் சேர்ந்தே
மௌனிப்போம்
சில வேளை மரணிப்போம்.
எமது மரணம்
என்றைக்காவது
ஒருநாள்
பெரிதென
மதிக்கப்படுகையிலே
எம் கல்லறைகள்
திறந்து
உயிர்த்தெழுவோம்
இரண்டாவது இயேசுவாய்

*30.06.1995*

## கவிதை ஒன்று எழுதுவோம் வா...

நீண்ட இடைவெளிக்குப் பின்னே
கவிதை எழுத ஆசை கொண்டேன்
எதை எழுதுவது? என் கேள்வி
நேற்றுதான் சொந்த ஊரிலிருந்து
வந்தேன்
இன்று என்னவளின் பிறந்த தினம்
நாளை மீண்டும்
பல்கலைக்கழகம்
செல்ல வேண்டும்.

விடுமுறையில் தொலைத்த
பாடங்களையும்
மறந்துபோன நண்பர்களின்
நண்பிகளின் (அதிகம் அல்ல)
முகங்களையும் பெயர்களையும்
ஞாபகப்படுத்த வேண்டும்

முப்பது நாட்களுக்குப் பின்னர்
அவளைச் சந்தித்தது இனிப்பாக
இருந்தது
"நாளை காலை சந்திப்போம்" என்றாள்
இன்றிரவு மட்டும் விரைவில் விடியாதா?
என்று என்னுள் கேட்டுக் கொண்டேன்...

இரவு ரூபவாஹினியில்
*Tele Drama* (டெலிராமா)
ஆரம்பமாகிவிட்டது.
கூடவே வெடிச்
சத்தங்களும்
தொடர்ந்து.... தொடர்ந்து.... தொடர்ந்து...
பேச்சு வார்த்தைக் கனவுகள் கலைந்து
போர் நிறுத்த உடன்படிக்கை என்ற
பொய்மைகள் தவிர்த்து மீண்டும்
உண்மை
ஆம் யுத்தம் ஆரம்பமாகிவிட்டதல்லவா?
துப்பாக்கிச் சத்தங்களைக் கேட்க
ஆசையாக இருக்கிறது
வீட்டில் அன்ரியின் பயம்
(எனக்கும் தான்)
ஆனால் என் நினைவுகள் எங்கோ
நாளை எப்படி அவளைச் சந்திப்பது?
விடிந்தது... (வெளியில் மட்டும்)
ஊரே அடங்கிப் போயிருந்தது.
நேற்றைய தினம் பொலிஸ் காவல்
நிலையம் தாக்கப்பட்டது.
செய்திகள் வந்தது...
ஆனால் இறந்து போனதோ
அப்பாவிப் பொதுமக்கள்

(மட்டக்களப்பு "மாமாங்கம்" பொலிஸ் காவல் நிலையம்
தாக்கப்பட்ட அன்றிரவு எழுதியது)

**22.05.1995**

# அழிவு

எம்
வதிவிடங்கள் தாண்டி
உள்ளே வந்தார்கள்
குருவிக் கூட்டைப் போல்
கட்டியிருந்த
எங்கள் வாழ்விடம்
கண நேரத்தில்
கலைக்கப்பட்டது.

எனது மூதாதையர்கள்
அள்ளிப் பருகிய
கிணற்று நீரெங்கும்
ரத்தம் ஊற்றெடுத்தது.

வளவுகள்
தாண்டிப் பாயும்
எம் கிராமத்து ஓடையெங்கும்
மனித உடல்கள்
அணைகளாய் நின்றன.

நானும் அவளும்
கூடிக் கழித்த
அந்த பூவரசமர
விழுதுகள் எங்கும்
மனிதத் தசைகள்
அப்பிக் கிடந்தன

முன்னேறி
முன்னேறி
அவர்கள் வந்தார்கள்
தகர்த்தெறியப் பட்ட
தேவாலயத்தின் ஊடே.

எம் மக்கள் எல்லாம்
இடம் பெயர்ந்தார்கள்
துஷ்டரைக் கண்டு
தூர விலகுவது போல்

திடீரென ஓர் நாள்
அது நிகழ்ந்தது.
எங்கள் பையன்கள்
அவர்களோடு
மோதிப் பாய்ந்தார்கள்
எமக்கு...
ஒன்று மட்டும் புரிந்தது
ஓடுவது இன்னமும்
அதிக காலத்திற்கு அல்ல.

*23.04.1995*

# A Diary of Unemployed

*(1)*
மறுக்கப்படுவதற்காகவோ
பிறப்பெடுத்தன என் கனவுகள்
என் மனப் பிரபஞ்ச விளிம்பில்
உன் நினைவுகளைப் பரப்பி
ஆரம்பம் இதுவென நீ சொன்னாய்
இதுவரையும் அது
ஆரம்பமாகவே...
எனக்கான முடிவு தெரியவில்லை.
நான்  என்ன செய்யட்டும்
என்னைப் பார்த்து பரிதாபப்பட்டு பறக்கும்
அந்த சின்னஞ் சிறு பறவையுடன்
நானும் சேர்ந்து பறக்கவா?
இல்லை நீ சொல்ல
ஏதும் மீதமிருக்கிறதா?,
சொல் காத்துக் கிடக்கிறேன்.

*(2)*
இரவுகளை வழியனுப்பும்
ஓர் இசைப்பாடகனாய் நான்
சோகங்களை மட்டுமே
சுரம் பிரிக்கத் தெரிந்த நீ
உனக்குவாழ்த்து மடல்கள்
வந்து குவியலாம்
எனக்கான வாழ்க்கை மடலே
இங்கு கிழிபட்டுப் போனது
என்னை அழவிடுங்கள்
உணர்வுகள் குழம்புகின்றன
நான் - அவளைத் தேடப்போய்
என்னையே தொலைத்து விட்டவன்.

*23.04.1994*

## ஞாபகச்சுவடுகள்

ஓ......
நகர்ந்து போன நாட்கள்
உன் சடையைப் பிடித்தபடி
வாயினால் ஒலி எழுப்பி
புகை கக்கி ரயில்விட்ட நாட்கள்.

சவர்க்கார நுரைநீரில்
பப்பாசிக் குழாய் வைத்து
முட்டைகள் செய்வோம்
சவர்க்கார முட்டைகள் செய்வோம்
தேர்க்கால் குதிரையின் கீழ்
நானும் நீயும் "அம்மா அப்பா"
விளையாட்டு விளையாடி
மண் பொம்மைகளை
எங்கள் பிள்ளைகளாக்குவோம்
ஊரில் இருந்து
உன் மாமா கொண்டு வந்த
இனிப்புத் துண்டை
உன் தாவணியில் மடித்து
எச்சில் படுத்தி கடித்துத் தருவாய்
இன்னமும் உனக்கு
அந்தத் தழும்பு இருக்கிறதே
சிவப்பு ரோஜாவைப்
பறிக்க நீ போராடிய போது
உன் கன்னத்தில் தைத்த
அந்த முள்ளின் தழும்பு
என்றும் அழியா எம்
காதலைப் போல்
ஞாபகச் சுவடுகளாய்

*22.02.1994*

## அகதிக் காகம்

ஜன்னல் கதவுகள்
திறக்கப்பட்டன
நேற்று பெய்த மழையின்
மிச்சம்
இன்னமும் தொடர்ந்து
கொண்டேயிருக்கிறது....
எங்கள் ஹொஸ்டலில்
முன் புறத்தே
அந்த முருங்கை மரத்தின்

கிளையில்
ஒற்றைக் காகம்
மழையில் நனைந்தபடி
குளிரில் நடுங்கிக்
கொண்டிருந்தது.

"பறவைகளில்
காகம் தந்திரமுள்ளது"
சிறு வயதில் நிலாச்சோறு
ஊட்டும் போது
அம்மா சொன்ன
காகமும் வடையும்
கதை என் ஞாபகத்தில்
(சிரித்துக் கொண்டேன்)
மழைக்குளிரில்
சிறுநீர் கழிக்க வந்த
நண்பன்
என்னையும்
முருங்கை மரத்தின் கிளையில்
நடுங்கிக் கொண்டிருந்த
காகத்தையும் பார்த்தான்
"இது என்ன அகதிக் காகமா"?
நக்கலாய்க் கேட்டு விட்டுச்
சென்றான்

ஆம்
அது அகதிக் காகம்
என்னைப் போல்
சொந்தங்கள் பிரிந்து
பந்தங்கள் விட்டு
தேசம் விட்டு
ஆம்
நானும் ஒரு
அகதிக் காகம்

*23.02.1994*

## புதிய குருஷேத்திரம்

ஜன்னல் சட்டமிட்ட
ஓர் இருட்டு அறைக்குள்
என்னை அடைத்து வைத்து
"எங்கே உன் ஆயுதம்....?
என்றார்கள்
கிழிந்திருந்த என் சட்டைப் பையில்
தொங்கிக் கொண்டிருந்த
என் பேனாவை
எடுத்துக் கொடுத்தேன்
அறைந்தான் ஒருவன்
இயேசுநாதர் சொன்னது போல்
இடக் கன்னத்தையும் திருப்பிக் காட்ட
எனக்குத் தைரியம் இருக்கவில்லை
காட்டியிருந்தால் நிச்சயம்
அதற்கும் அறை என்பது
எனக்குப் புரியும்
ஆனாலும்
நான் மனதுக்குள்
கேட்டுக் கொண்டேன்
"ஏன் எனக்கு அறைந்தாய்?
உன் கேள்விகளுக்கு நான்
சரியாகவே பதில் சொல்கையில்
உனக்குத் தேவையான

எனது ஆயுதத்தை
உன்னிடம் ஒப்படைக்கையில்
நிராயுத பாணியான
எனக்கு ஏன் அறைந்தாய்?”
எனக்கான தீர்ப்பு
உன் கரங்களில் தொங்கும்
துப்பாக்கியினால்
எழுதப்பட்டு விட்ட நிலையில்
எங்கோ ஒரு மூலையில்
எனக்கான டயர்கள்
அடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில்
உன் அறை எனக்கு
வலிக்கவில்லைதான்
ஆனாலும்
உனக்கு ஒன்று சொல்வேன்
எஸ்லோன் பைப்பினால்
நீ என் எலும்புகளை
முறித்தாலும்
உன் பெல்ட் முனைகள்
என் உடலில் சித்திரங்கள்
வரையினும்
உன் கோரப்பற்கள்
என் நகங்களைப் பிடுங்கினும்
எழுச்சிகளையே
எழுதிக் கொண்டிருக்கும்
எனது பேனா
ஓயப் போவதில்லை
வேறு கரங்களுக்கு
அது இடம் மாறும்
மீண்டும் உனக்கான போராட்டம்
தொடரும் என்பது
உறுதி...!
உறுதி... !
உறுதி... !

*01.01.1994*

## ஒரு மழை நாளில்...

மீண்டும்
ஒரு மழை நாளில்
சோகங்கள்
குடை பிடிக்கும்

வீட்டு முற்றத்தின்
ஓடும் தண்ணீரில்

காகிதக் கப்பல்கள் விட்ட நாட்கள்
எதிரும் புதிருமாய் இருந்த
எம் வீடுகளுக்கு எதிராய்
நாம் நின்றோம்
என்னை...
முந்திச் செல்லும் உனது கப்பல்
உன்னை - முந்திச் செல்லும்
எனது கப்பல்
எல்லாம் -
வெள்ளத்தின்
விளையாட்டில்
மீண்டும்
ஒரு மழை நாளில்
சோகங்கள்
குடை பிடிக்கும்

மழையைக் காரணம் காட்டி
மாலை நேர வகுப்புக்கு
மட்டந்தட்டி
"எக்கனாமிக்ஸ் டியூட்" வாங்க
நான் வருவேன்.
எனக்காகவே
காத்திருப்பது போல்

உனது நோட்டுப் புத்தகம்
காத்திருக்கும் -
ஒரு கடிதத்துடன்
எங்களூர் காளி கோயில்
திருவிழாக் காலத்தில்
ஒரு மழை நாளில்
உன்னை நனையாமல்
வீடு சேர்க்க
ஒரு குடையின் கீழ்
நாம் இருவரும்
ஒருவரையொருவர்
உரசியபடி நடந்தோம்
அந்த ..... மழைநாளில்
எனக்கு - வியர்த்தது போல்
என்றுமே வியர்த்ததில்லை
மகாவலி கங்கையின்
ஊஞ்சல் பாலத்தில்
ஒருவரின் கையை
ஒருவர் பிடித்தபடி
உல்லாசமாய் நடந்து திரிந்ததும்
ஒரு மழைநாளில்

இப்போதும்
மழைக்காலம்
மட்டும் என்னவோ
வந்து கொண்டு தான்
இருக்கிறது
ஆனால் நீ மட்டும் தான்
சம்மதமில்லாமல்
ஒருவனின் தாலியை
சுமந்து கொண்டு
இப்போதெல்லாம்
உன் கண்களில்
தினமும்
மழைக்காலம் தான்.

*15.09.1993*

## பால்வெளித் தெருக்களில்...

கானல் நீர்
வெளிக் காட்டில்
காலத் தெருவினூடே
என் இருப்பைத் தேடும்
சுயானுபவத்தில் நான்
விடிதல் வேண்டி
தினம்
உன் ஞாபக கற்களில்
கால் இடறி .....

சுட்டெரிக்கும்
பால் வெளியில்
கிழிபட்டுத் தொங்கும்
கனவுகளைச் சுமந்து
யாத்திரை போகும் இவன்
கண்ணீர்த் துளிகள் வழிகின்றன
ஸகீ....
நீண்ட பாதையின்
இடைநடுவே
இடம் மாறிப் போனாயோ?

பாதை நோக்கிய என் தேடல்
சுயம் இழக்க வைப்பதாய்
உன் விழித்தல்

உன் மௌனத்திரை விலக்கி
யதார்த்தம் நோக்கு
நாளையாவது
உன் கரம் பற்றி
எமதான இருப்பை
உறுதி செய்ய மனம் துடிப்பேன்!

*10.09.1993*

## மூன்று கவிதைகள்

*(1)*
எங்கே என் காலம்?
எங்கேயோ தொலைத்தேன்
என் தேடல் தொடர்கிறது
இழுபட்டு...
மனம்...
சமயங்களில்
தொங்கும் நினைவுகளில்...
காலச் சிதைவுகளில்
மனம் வெதும்பும்
கிடைக்காதது
எதுவென்றறிந்து
அதற்காய் மனம் ஏங்குவதும்
திட்டமிட்டு.. திட்டமிட்டு..
எதிர்காலத்திற்காய் ஏங்குவதுமே
வாழ்வாகிப் போய்...
எங்கே என் வாழ்க்கை?
இக் கணத்தில் நான் வாழ
எங்கே என் வாழ்க்கை?
புதிது புதிதாய் தேடல்கள்
ஒரு.... முற்றுப் புள்ளி நோக்கி...

*(2)*
வெளிப்படுதல் இதோ...
ஆரம்பமாகின்றது...

என்னுள் இருந்து
ஒளி பாய்கிறது...
தேடலின் காட்டில்
என்னைத் தொலைத்து
தன்னந்தனியனாய்
நான்
வழி...
வெளிச்சம்...
மீறல்
இந்த பூமிக்கும்
ஆகாயத்திற்குமாய்
நான் வளர்வேன்
விருட்சமாய்

(3)
என் கபாலம் திறந்து
கவிதை ஊர்கிறது
ஒரு... ஞானியைப் போல்
வெளிச்ச வீதிகளை
இந்த பூமியெங்கும்
அறிமுகம் செய்து கொண்டு
விட்டு விட்டுப் பறக்கும்
அந்தச் சின்னஞ்சிறு
குருவியுடன்
என் கரங்களையும்
இணைத்துக் கொண்டு
பறக்கிறேன்...
பறவைகளின் பாடலை
மொழிபெயர்த்து
புல்லாங்குழலில்
புதிய இராகங்களை
சுவாசித்தபடி
நான்...

*01.08.1993*

## வேறிடம் நோக்கி

மீண்டும் எனது
சொந்த ஊர்
நேற்றைய மாலை
கால் பதித்தேன்
பயணக் களைப்பின்
இரவுத் தூக்கம்.
விடிகாலை
"மக்கள் அனைவரும்
திறந்த வெளி மைதானத்தில் கூடுக"
ஒலி பெருக்கி அறிவிப்பு
காற்றில் மிதந்து வரும்

மீண்டும் ஞாபகங்கள்
ராணுவம் -
முகமூடி -
கொடிகள் -
வாகனங்கள் -

பிரேதக் களைபுதைந்த
முகங்களைச் சுமந்து மக்கள் கூட்டம்
வீதியில் செல்லும்
அறியாத எதிரிக்காய்
தெரியாத முகத்தின் முன் நின்று
அடையாளம்
இடப்படும்.

இங்கு அடையாள அட்டைகள்
தங்கள் பெறுமதி இழக்கும்
தலையாட்டி பொம்மையின்
ஆட்காட்டி விரலே
பெறுமதி சுமக்கும்

அதிர்வுகள் கூடி
எங்கோ கேட்கும்
வெடிச்சத்தம்
குறைந்த பட்சம் இருந்த
நம்பிக்கைகளையும்
குழி தோண்டிப்புதைக்கும்

பயணங்கள்
பலருக்கு
இறுதியானவை
தலையாட்டி
அருள் பெற்று முதலில் வெளியே
செல்லத் துடிக்கும்
கூட்டத் தொடர்
தாகம்
நாளை நான்
போக வேண்டும்
இந்த இடத்தை விட்டு
வேறிடம் நோக்கி.....
அது எங்கே...?
அது எங்கே...?

*24.06.1993*

## பிரக்ஞை

என் மன வெறுமையின்
மௌன விளிம்பில்
முடிச்சிட்டு தூங்கச்
சொல்பவளாய் நீ

இதுவரைக்கும் நான்
உன் கவிதைகளுக்கு
முற்றுப்புள்ளி இடும்
முட்டாளாய்த்தான்
இருந்திருக்கிறேன்
இதில் வேடிக்கை
கேள் தோழி
துடித்து விழுந்த

அந்த இரவில்
என்னைத்
தனியாகத்
தவிக்கவிட்டு
நீ -
புயலாய் வெளியேறிய
அந்தக் கனத்தில் கூட
நான் -
என்னைப் புரியாமல்
உன்னை மொழி பெயர்த்தே
காலம் கடத்தியிருக்கிறேன்.
என்னைப்
புரிந்து கொண்டவளாய்
உன்னை நினைத்து
என் மனக்கோப்பை
சிந்தும் சுயதாபம்
விரக்தித் துளிகளாய்
சிதறி...
பெருவெள்ளமாகி
எனக்குத் தெரியும்
இங்கே சில இதயங்கள்
உருகுவதற்கென்றே
படைக்கப்படுகின்றன.

உன் மனச்சிலுவையில்
அறையப்பட்ட
என் ஞாபக உயிர்
விழியிழந்து
உன் உயிர்க்கோல்பற்றி
மனமுறிவுத் தேடல்களோடு
பிரக்ஞை இழந்து
ஒரு நகர்தலில்
காணாமற் போகும்.

*11.04.1993*

## என் உயிர்த் தோழனுக்கு...

சந்திக்கலாம் என்ற
நம்பிக்கையில்
நான் காத்திருக்கின்றேன்
அதற்குள் நான்
தோற்றுவிட்டேன் என்று
நீ முரசறிவிப்பது சரியல்ல.

நான் தற்போது
துவண்டு போய் இருக்கிறேன்
துவண்டிருப்பது தோல்வியல்லவே
துவண்டு விட்டேனேயொழிய
தொலைந்து விடவில்லை.

என் போர்
இன்னும் முடிவிற்கு வரவில்லை
என்னைப் பொறுத்தவரையில்
இன்னமும் ஆரம்பமாகவேயில்லை
இருட்டிய வாசல் வழியே நின்று
பாதை தேடும் குருடனாய் நீ
வெற்றுக் கோஷங்களுக்கு
குடை பிடித்து
உன் சொந்தங்களை அழிப்பதற்காய்
உன் கர்வம்
கர்வப்பட்டுக் கொண்டிருக்கிறது.

என் மனக் குகை திறந்து
என் பாதைகளை
நான் செப்பனிட்டுக் கொள்கிறேன்
நாளைய போரின் ஆயத்தம் வேண்டி..
கண்களை இழந்த
குருட்டு வெளவால்களாய்
திசை தெரியாத திக்குகளில்
மனம் அலைபாய
தலைமைகளின் தலைமைகளுக்குள்
சிக்கிப் பட்டிருக்கும்
நிலை இல்லை இங்கே.

என்னை அறிந்து
என்னை உரித்து
என்னை இழந்து
என்னை மீட்க
நான் நடத்தும் வேள்வி
இழப்புக்களின் தொடர் புள்ளியில்
என் வாழ்க்கைச் சக்கரம்
சுழன்று கொண்டிருக்கும்
என் மன விலங்கின்
நகக் கால்கள் தோண்டும்
என் நாளைய இருப்பை
உறுதி செய்தலுக்கான
போராட்டம்
ஆம் அப்படிச் சொல்வேன்
இன்றும் (இன்னும்)
உன்னை எதிர்க்கும் துணிவில்
நான் நிற்கிறேன்
சந்திக்கலாம்
என்ற நம்பிக்கையில் நான்
இன்னமும் காத்திருக்கிறேன்
மானுட நேசிப்போடான
எனது நாளைய வெற்றியை

*25.02.1993*

## உயிர்ப்பு

*மீண்டும் உயிர்ப்போம்*
*ஃபீனிக்ஸ்சின் பரம்பரையாய்*
*நான் -*
*நீ*
*நாங்கள் -*
*இந்த தேசம் உள்ளவரை*
*எமக்கானவையாய்*
*இப்பூமியை*
*உறுதி செய்ய*
*நாங்கள் உயிர்ப்போம்!*

*24.02.1993*

## நினைவுகள்

ஒரு செடியை
பிடுங்கினேன்
கைகளில் இரத்தம்
நாயின் வாலாய்
நினைவுகள்
மீண்டும்
மீண்டும்
வளைந்து கொண்டே
உன்னை
நினைத்தபடி
இந்த நினைவுகள்

*24.02.1993*

## காலம்

காலம்
ஒருநாள்
என்னுடன்
கைகுலுக்க வந்தது
நேரம் இல்லையென்று
திருப்பி அனுப்பினேன்
நேரம் இல்லையென்பது
பொய்
காலம் என்பது
பொய்யா? மெய்யா?
மொத்தத்தில்
நானும் பொய்
நீயும் பொய்
ஏன் இந்த
உலகம் கூட.

*24.02.1993*

## ஜீப் சத்தமும் பூட்ஸ் கால்களும்

*ஜீப் சத்தமும்*
*பூட்ஸ் கால்களும் ஒலிக்காத*
*அந்த கடந்த கால நினைவுகள்*
*நான் கவிதை எழுத*
*தொடங்கியிருக்கவில்லை*
*ஆனால் எல்லாமே*
*கவிதையாயிருந்தது*

*நீ*
*நான்*
*நமது சூழல்*
*வீடும் மரமும் தோட்டமும் எல்லாம்*
*ஒரு அழகிய கவிதையாய்...*

*எங்கள் வீடுகள்*
*அருகருகே தான் இருந்தன*
*ஆனால் நாங்கள் தான்*
*தூரதூரமாய் இருந்தோம்*
*ஒரு இரவுப் பொழுதில்*
*ஜீப் சத்தம் கேட்டது*
*பூட்ஸ் கால்கள் ஒலித்தன*
*உன் அண்ணன் காணாமல் போனான்*
*அன்று தான் நான்*
*கவிதை எழுதத் தொடங்கினேன்*
*இன்னமும் எழுதுகிறேன்*
*எப்போது ஜீப் சத்தமும்*
*பூட்ஸ் கால்களும் ஒலிக்காத*
*நாள் வருகிறதோ*
*அதுவரை! அதுவரை....!!*

***23.02.1993***

## சுதந்திரம்

*அவனின்
நெற்றிப் பொட்டில்
அந்தத் துப்பாக்கி
அழுத்தப்பட
ஆயத்தமாக இருந்தது
"என்ன எழுதினாய்?
எதற்காக எழுதினாய்??"
கேள்விகள்
கேள்விகள்
"உண்மையை எழுதினேன்
என் மக்களுக்காய்
எழுதினேன்"
பதில்கள்
பதில்கள்
"டுமீல்"
இவனைத் தூக்கிச்
செல்லுங்கள்.*

*22.02.1993*

## ஒற்றை நட்சத்திரம்

*கல்லூரி நாட்களில்*
*என்..... "ஆட்டோ கிராபை"*
*உன்னிடம் நீட்டிய போது*
*"பிரிபவர்கள் தான்*
*எழுதிக் கொள்வார்கள்*
*இணைபவர்கள்*
*நினைத்துக் கொள்வார்கள்" என்றாய்*
*மனதில்*
*ஆயிரம் நட்சத்திரங்கள்*
*பூப் பூத்துச் சிதறின*
*கனவுகளின் நந்தவனத்தில்*
*நான்... கால் இடறி விழுந்தேன்*
*பனிப் புஷ்பங்களாய்*
*உன் ஞாபகங்கள்.*

*என் நேசங்களைப்*
*பொறுக்கியெடுத்து*
*உனக்குச் சூடவந்தேன்*
*"சில காலம்...*
*பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றாய்.*

*நிரந்தரப் பிரிவும் இல்லை*
*நிஜமான இணைப்பும் இல்லை.*
*எம் வடக்கு கிழக்கு மண்ணைப்போல்*
*இரண்டுக்கும் நடுவே*
*ஒற்றை நட்சத்திரமாய்*
*உன் நினைவில்*
*எரியும் நான்.*

*23.10.1992*

# இரண்டாவது முடிவு

*மீண்டும் தொடருமோ இந்த யுத்தம்*
*மேலும் தொடருமோ மனித வதை*
*தொடர்வதாய் தொடர்வதாய்*
*இழப்புகள் எமக்கு புதியதல்லவே*
*ஆயினும் இழப்புகள் தவிர்க்க முடியாதவை*
*தடுக்க முடியாதவை*

*கனவுகளிலும் கைகள் தேடுவது*
*எங்கள் அடையாள அட்டையையே*
*நாங்கள் மட்டுமேன் எல்லாப் பக்கமும்*
*ஏமாற்றப்படுகின்றோம்*
*காக்க வந்தவர்களே எம்மைத்*
*தாக்கிப் போனார்கள்*
*எங்களுக்காய் தங்கள் உயிர்களைத்*
*தருவதாய் சொன்னவர்கள்*
*தம் உயிர் காக்க ஓடியே போனார்கள்*
*இந்த தேசம் விட்டு*
*ஒரு கேள்வி*
*நாங்கள் இருப்பதாய்*
*ஒருவருக்கும் ஞாபகமில்லையோ*
*நாங்கள்  மறக்கப்பட்டு விட்டோமா?*
*இல்லை மறக்கடிக்கப்பட்டோமா?*

*நாளை என்பது தேவையில்லை*
*இன்றே எமக்கு வாழ்தல் போதும்.*

*(வாழ்தலுக்கு முன்னே* ***"நிம்மதியாய்"***
*என்பதைச் சேர்த்துக் கொள்ளுங்கள்)*

***23.06.1990***

## ஒற்றைப்பனை

ஒற்றைப்பனைமரமாய் நிற்கிறது
அவள் வீட்டு வாசலில்
என் ஞாபகங்கள்
அன்றொருநாள்
நான் கொடுத்த பனம்பழம்

*20.06.1990*

## முரண்

மரத்திற்கு கீழே
ஷெல் வீச்சில் இருந்து
தப்புவதற்காய்
பங்கர் வெட்டும் அவளது குழந்தைகள்
கையில் துப்பாக்கியுடன்
எல்லைக் காவலரணில் நான்

*20.06.1990*

# மைக்கல் கொலின் ஒரு பின்னீடு

நண்பர் மைக்கல் கொலினை நான் அறிந்து கொண்டது ''ஈழமுரசு காலத்தில் தான். 1987 கால கட்டத்தில் ஈழமுரசில் சில காலம் உதவி ஆசிரியராக இருந்தேன். வார மலர் இலக்கிய பகுதிக்காக பழைய படைப்புக்களை ஆராய முற்பட்ட போது மைக்கல் கொலினின் படைப்புக்கள் என்னை தன் பக்கம் ஈர்த்துக் கொண்டன. அவற்றைப் பிரசுரிக்க நான் முற்பட்டேன். ஏலவே நிலவுக்கு பயணித்தவர்களில் ஒருவரின் பெயர் பரிச்சயமாக இருந்தமையால் ஏற்பட்ட ஆகர்சிப்பும் இதற்கொரு காரணமாகும்.

பின்னர் திருமலைக்கு வாழ வந்த ஆரம்ப காலத்தில் ''தாகம்'' மைக்கல் கொலினாக அவர் அறிமுகமானார். தாகம் வெளியீடாக வந்த சித்திரா நாகநாதனின் ''கிராமத்து மண்கள் சிவக்கின்றன. சிறுகதைத் தொகுதி, தாமரைத்தீவானின் ''கீறல்கள்'' வரை அத்தொடர்பு வலுப்பெற்றது. தாகம் ஒழுங்கு செய்த இப்னு அஸூமத்தின் ''ராத்திரி'' அறிமுகக் கூட்டம், அமரர் டானியல் நினைவுக் கூட்டம் என இத்தொடர்பு வளர்ந்தது. பின்னர் மைக்கல் கொலின் எடுத்த தனது ''என் பிரிய ராஜகுமாரிக்கு'' புதுக்கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவும் (இதுவே நான் முதல் முதல் கண்ட ஒளிப்பதிவு செய்யப்பட்ட முதல் விழா) சத்யஜித்ரே காலமான போது அவர் நினைவாக ஒழுங்கு செய்யப்பட்ட குறும் பட நிகழ்வும் (சரஸ்வதி தியேட்டர் வெளியரங்கம்) இதில் ''சத்கதி'' படத்தைப் பார்க்கக் கிடைத்தது என்னால் மறக்க முடியாதவை. தாகம் சஞ்சிகை நின்று அவர் பல்கலைக்கழக அனுமதி பெற்று மட்டக்களப்பு சென்ற பின் தொடர்புகள் அறுந்து போயின.

பல்கலைக்கழகக் காலத்தில் ''ஃபீனிக்ஸ்'' என்ற கவிதைச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டதாகவும்; 1995ம் ஆண்டில் தாகம் 10வது ஆண்டு மலரை மட்டக்களப்பில் வெளியிட்டதாகவும் ( முதலாவது ஆண்டு மலர் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது). பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்து ''தழல்'' என்ற சஞ்சிகையை வெளியிட்டதாகவும் பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடிந்தவுடன் மட்டக்களப்பின் முக்கிய பத்திரிகையாக விளங்கிய ''தினக்கதிர்'' வாரப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், ''தினக்கதிர்'' நாளிதழின்

இணை ஆசிரியராகவும் அவரது பங்களிப்பு இருந்தமையை பின்னர் அறிந்து கொண்டேன்.

நெடு நாட்களின் பின் அவரைச் சந்தித்தேன். இப்போது அவர் "மகுடம்" காலாண்டிதழ் ஆசிரியர் தொடர்பு தொடர்கிறது. இதேபோன்று மட்டக்களப்பில் இன்று வெளிவரும் "படிக்கல்" என்ற கல்விச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர். கனடாவில் இருந்து வெளிவரும் "ஆதவன்" இருவார பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் உள்ளார். கவிஞர் மைக்கல் கொலின் தமக்கென இறுக்கமான கொள்கை உடையவர். சமரசங்களுக்கு அப்பாற்பட்டவர். ஒளிவு மறைவின்றி தன் கருத்தை வெளியிடுபவர். இது அவர் பற்றிய எனது கணிப்பு

அவருக்கும் எனக்கும் கருத்து ரீதியாக பல உடன்பாடுகளும், சில முரண்பாடுகளும் உண்டு ஆயினும் அவரது கவிதைகளின் பிரிய வாசகன் நான்.

யாருடைய அங்கீகாரத்துக்கும், அதிகாரத்துக்கும் பணிந்து போகாத ஒரு கலகக் குரலை அவர் கவிதைகளில் நான் பார்க்கிறேன். இந்தியப் படைக்கு எதிராக அவர் எழுதிய "ஆட்டாமா ரொட்டியும் ஆட்டிறைச்சிக் கறியும்" என்கின்ற கவிதையிலிருந்து இத்தொகுப்பில் அமைந்திருக்கின்ற கவிதைகள் இதையே எனக்குச் சொல்கின்றன. முடிவிலிருந்து பின்நோக்கி ஒரு ஆரம்பத்தை நோக்கி நகரும் இக்கவிதைகள் முரட்டுத்தனமும் போர்க்குணமும் உள்ள மைக்கல் கொலினின் இன்னொரு நெகிழ்ச்சியான பக்கத்தை உங்களுக்குச் சொல்லும் என நான் நிச்சயம் நம்புகிறேன். ஆயினும் இன்று பல கவிஞர்கள் தமது கொள்கைப் பிடிப்பிலிருந்து நழுவி காலத்தோடு தம்மைக் கரைத்துக் கொண்டு இருப்பது போல் மைக்கல் கொலினில் மாறாத ஒரு நல்ல தன்மையை நான் அவதானிக்கிறேன்.

பலம், பலவீனங்களை மறைக்காத நண்பன் மைக்கல் கொலினின் கவிதைகளை வாசித்த நீங்கள் பின் வரைவான எனது இந்தக் கூற்றினை மறுதலிக்க மாட்டீர்கள் என நினைக்கின்றேன். மைக்கல் கொலின் கவிஞர், கட்டுரையாளர், எனும் அங்கிகாரத்துடன் சிறுகதையாளன் எனும் மகுடத்தையும் அண்மையில் சூடிக் கொண்டுள்ளார்.

வருக .... வாழ்க ... வளர்க ....

அன்பு வாசகன் **நந்தினி சேவியர்**

இத் தொகுப்பிலுள்ள கணிசமான கவிதைகள் கடந்த முப்பது ஆண்டுகளாக நடந்து முடிந்து ஓய்வெடுக்கும் போர்க்கால வாழ்வியலுடன் தொடர்புபட்டவை "மரணத்துள் வாழ்வோம்" இரண்டாம் பாகம் வெளிவருமாயின் கிழக்குப் பிரதேச போர்க்கால வரலாற்றை ஆவணப்படுத்துவதற்கு இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் பெருமளவு பயன் படுவதற்கான வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈழத்துக் கவிஞர்களுள் வாழ்வின் இருப்பு, தேடல் என்பன பற்றிப் பாடுகின்ற புதிய தலைமுறைக் கவிஞர்கள் ஒருசிலரே. இத் தொகுப்பிலும் அத்தகைய கவிதைகள் இருப்பது இத்தொகுப்பின் பிறிதொரு முக்கியத்துவமாகின்றது. தமிழ்ப் புதுக் கவிதை முன்னோடிகளுள் முக்கியமானவரான பிரமிள் அவ்வாறான கவிதைகள் தந்திருப்பதும் அன்னார் திருகோணமலைக்குரியவர் என்பதும் இக் கவிஞரும் திருகோணமலைக்குரியவர் என்பதும் இவ்வேளை ஞாபகத்தைத் தொடுகின்றன.

- பேராசிரியர் செ. யோகராசா

கவிஞர் மைக்கல் கொலின் தமக்கென இறுக்கமான கொள்கை உடையவர். சமரசங்களுக்கு அப்பாற்பட்டவர். ஒளிவு மறைவின்றி தன் கருத்தை வெளியிடுபவர். யாருடைய அங்கீகாரத்துக்கும், அதிகாரத்துக்கும் பணிந்து போகாத ஒரு கலகக் குரலை அவர் கவிதைகளில் நான் பார்க்கிறேன். இந்தியப் படைக்கு எதிராக அவர் எழுதிய "ஆட்டாமா ரொட்டியும் ஆட்டிறைச்சிக் கறியும்" என்கின்ற கவிதையிலிருந்து இத்தொகுப்பில் அமைந்திருக்கின்ற கவிதைகள் இதையே எனக்குச் சொல்கின்றன. முடிவிலிருந்து முன்நோக்கி ஒரு ஆரம்பத்தை நோக்கி நகரும் இக்கவிதைகள் முரட்டுத்தனமும் போர்க்குணமும் உள்ள மைக்கல் கொலினின் இன்னொரு நெகிழ்ச்சியான பக்கத்தை உங்களுக்குச் சொல்லும் என நான் நிச்சயம் நம்புகிறேன். ஆயினும் இன்று பல கவிஞர்கள் தமது கொள்கைப் பிடிப்பிலிருந்து நழுவி காலத்தோடு தம்மைக் கரைத்துக் கொண்டிருப்பது போலல்லாது மைக்கல் கொலினில் மாறாத ஒரு நல்ல தன்மையை நான் அவதானிக்கிறேன்.

- நந்தினி சேவியர்



ISBN: 978 - 955 - 4041 - 19-6

9 789554 041196